இந்த விலைக்கழிவு நாரஹேன்பிட்ட எலைற்ரேடியோ காட்சியறையில் மற்றும் shop.eliteradio.com மூலமான கொள்வனவுகளுக்கு மட்டும் வழங்கப்படும்.
Ceiling
Pedestal
Table
Orbital
Wall
Exhaust
KDK SINCE 1909 JAPAN
ELITERADIO Since 1959
facebook.com/kdksrilanka | shop.eliteradio.com
வார நாட்களில்: 9:00am - 5:00pm | சனிக்கிழமை: 9:00am - 1:00pm

Follow us:

# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 258 சோபகிருது வருடம், ஆனி மாதம் 05ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (20.06.2023) ஹிஜ்ரி 1444, துல்ஹஜ் - 01, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50

BEAT THE HEAT
The Reliable Fan
1st June to 30th June 2023
DISCOUNT 15% (On selected models only)
*Conditions apply
KDK SINCE 1909 JAPAN
Ceiling | Pedestal | Table | Orbital | Wall | Exhaust
ELITERADIO Since 1959
Inquiries (011) 250 0823 | (011) 236 8472 / 73 / 74



வரலாற்று சிறப்புமிக்க நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவப் பெருவிழா நேற்று (19) கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. (படப்பிடிப்பு: யாழ். செய்தியாளர்)

# ஆளுங்கட்சியின் விசேட கூட்டம்!

## ஜனாதிபதி தலைமையில் மாத இறுதியில்

## எம்.பிக்கள் கொழும்பில் தங்கியிருக்க உத்தரவு

## வெளிநாடு செல்லவும் தடைவிதிப்பு

**நமது அரசியல் செய்தியாளர்**

ஆளுங்கட்சியின் விசேட கூட்டமொன்று எதிர்வரும் 28ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறவுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு ஆளுங்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கேட்கப்பட்டுள்ளனர். அதேசமயம், பாராளுமன்ற உறுப்பினர்களை கொழும்பில் தங்கியிருக்குமாறும் வெளிநாடுகளுக்கு செல்லவேண்டாமெனவும் ஆளுங்கட்சியின் பிரதம கொறடா அலுவலகம் அறிவித்துள்ளது.

தற்போது வெளிநாடு சென்றுள்ள ஜனாதிபதி ரணில் நாடு திரும்பியவுடன் அரசியலில் சில விடயங்களை மேற்கொள்ளவிருப்பதாகவும் அமைச்சரவை மாற்றமொன்று இடம்பெற வாய்ப்புள்ளதாகவும் அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

# ஜூன் 29 இல் புனித ஹஜ் பெருநாள்

நாட்டில் பல்வேறு பகுதிகளிலும் துல்ஹஜ் மாதத்துக்கான தலைப்பிறை தென்பட்டதால் புனித ஹஜ் பெருநாளை எதிர்வரும் 29ஆம் திகதி கொண்டாடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

02பக்கம்

# 10,500 சிறுவர் துஷ்பிரயோகங்கள் 2022 இல் பதிவு

**நா. தினுஷா**

நாட்டில் கடந்த 2022ஆம் ஆண்டு 10ஆயிரத்து 497 சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் சிறுவர் உரிமை மீறல் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. மேலும் சிறுவர்கள் மீதான இரண்டாயிரத்து 96 கொடுமைப்படுத்தல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

2022ஆம் ஆண்டு ஜனவரி 01ஆம் திகதி முதல் டிசம்பர் 31ஆம் திகதிவரை அதிகார சபையினால் முன்னெடுக்கப்பட்ட...



02பக்கம்

## இன்று கூடுகிறது பாராளுமன்றம்

# ஊழல் ஒழிப்புச் சட்டமூலம் நாளை விவாதத்துக்கு

**நா. தினுஷா**

பாராளுமன்றம் இன்று செவ்வாய்க்கிழமை கூடவுள்ளதுடன் ஊழல் ஒழிப்புச் சட்டமூலம் நாளைய தினம்(21) பாராளுமன்ற விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சட்டமூலமானது, நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவினால் மூன்றாம் வாசிப்புக்காக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இன்று (20) கூடவுள்ள பாராளுமன்ற அமர்வுகள் எதிர்வரும் 23ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்தார்.

02 பக்கம்

# சந்தையில் நிறமூட்டப்பட்ட சிவப்பு சீனி விற்பனைக்கு

## பொது சுகாதாரப் பரிசோதகர்கள் எச்சரிக்கை

**நா. தினுஷா**

சந்தையில் சிவப்பு சீனிக்கு அதிக கேள்வி நிலவுவதால், இலாப நோக்குடன் செயற்படும் ஒருசில வியாபாரிகள் மோசடியான முறையில் வெள்ளை நிற சீனிக்கு நிறமூட்டி சிவப்பு சீனி என்று கூறி அதிக விலைக்கு விற்பனை செய்கின்றனர். ஆகவே சீனியை கொள்வனவு செய்யும்போது சீனியின் தன்மை குறித்து...

02 பக்கம்



# விலை அதிகரிப்புக்கு எதிராக போராட்டம்

## லொத்தர் சீட்டு விற்பனையாளர்கள் தீர்மானம்

லொத்தர் சீட்டொன்றின் விலையை 40 ரூபாவாக அதிகரிப்பதற்கு எதிர்ப்பை வெளியிடுதல் உள்ளிட்ட மேலும் சில கோரிக்கைகளை முன்வைத்து அகில இலங்கை லொத்தர் விற்பனை முகவர்கள் மற்றும் விற்பனை உதவியாளர்கள் எதிர்வரும் 06ஆம் திகதியிலிருந்து லொத்தர் விற்பனையிலிருந்து நீங்குவதற்கு தீர்மானித்துள்ளதாக அகில இலங்கை லொத்தர் விற்பனையாளர்கள் சங்கத்தின் தலைவர் கிரிஷாந்த மாரம்பகே தெரிவித்துள்ளார்.

02 பக்கம்

# செப். 15க்குள் மாகாண சபை தேர்தல் திகதி

## அறிவிக்கக் கோருகிறார் மஹிந்த தேசப்பிரிய

**நா. தினுஷா**

நாட்டில் செயலிழந்துள்ள மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்கு இரு வழிமுறைகள் இருக்கின்றன. பழைய தேர்தல் முறையில் தேர்தலை நடத்துவதாகவும் அவ்வாறு,...

02 பக்கம்



## கோட்டாவுக்கு நேர்ந்தது

# ரணிலுக்கு இடம்பெறாது

## உறுதி கூறுகிறார் மஹிந்தானந்த

02பக்கம்

## பெற்றோரால் கடும் துன்புறுத்தல்

# வீட்டைவிட்டு வெளியேறிய சிறுவன் ஹட்டனில் மீட்பு



**த. யுவராஜ்**

பெற்றோரால் கொடூரமாகத் தாக்கப்பட்ட நிலையில் வீட்டை விட்டு வெளியேறிய 15 வயது பாடசாலை மாணவன் ஒருவரை ஹட்டன் ரயில் நிலையத்தில் நேற்று திங்கட்கிழமை (19) அதிகாலை மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

02 பக்கம்

## கமெண்ட் கந்தர்...



ஆளுங்கட்சி எம்.பிக்களை டென்ஷனிலேயே வைத்திருக்கிறார் ஜனாதிபதி... அப்போதுதான் எங்கே பார்லிமெண்ட் கலைக்கப்படுமோ என்று நினைச்சு எம்.பிக்கள் தன் பக்கத்திலேயே இருப்பார்கள் என்று நினைக்கிறார் போல...

# வரி செலுத்தத் தவறிய மது உற்பத்தி நிறுவனம்

## ரூ.275 கோடி நிலுவையில்




உற்பத்தி நடவடிக்கைகளை இடைநிறுத்தியுள்ள மதுபான நிறுவனமொன்று மதுவரித் திணைக்களத்துக்கு கடந்த 2022ஆம் ஆண்டு 275 கோடி ரூபா வரிப்பணத்தை செலுத்தத் தவறியுள்ளதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் தெரிவித்துள்ளது.

02 பக்கம்

# விமலுக்கு நீதிமன்றம் பிடியாணை உத்தரவு

## வழக்கில் முன்னிலையாகாததால் நடவடிக்கை



நீதிமன்ற வழக்கு விசாரணைகள் தொடர்பில் ஆஜராகாமை காரணமாக முன்னாள் அமைச்சர் விமல் வீரவங்சவை கைது செய்வதற்கு நீதிமன்றத்தால் நேற்று (19) பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் நாயகம் இளவரசர் செய்ட் அல்ஹுசைன் 2016ஆம் ஆண்டு...

02 பக்கம்

## உஷ்



புதிய பொலிஸ் மா அதிபர் பதவிக்கு புதிய ஒருவரை நியமிக்கும் எண்ணம் ஜனாதிபதிக்கு இல்லையாம். இப்போதுள்ளவருக்கே சேவை நீடிப்பை வழங்க ஆலோசிக்கிறாராம் ஜனாதிபதி.

புதிய பொலிஸ் மா அதிபர் பதவிக்கு பலர் கண்வைத்துள்ளதால் இந்த தீர்மானத்தில் ஜனாதிபதி இருப்பதாக தகவல்.

# சர்வதேச சமூகத்தின் முன் முட்டாள்த்தனமான முடிவுகளை எடுக்காமல் ஒன்றிணைந்து சர்வதேச நாணய நிதிய விடயங்களை வென்றெடுப்போம்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அரசாங்கத்துக்கு முன்மொழிவு





தங்கள் சொந்த எண்ணங்களின் பிரகாரம் அவசரப்பட்டு சர்வதேச நாணய நிதியத்தால் சொல்லப்படுவதை ஒத்துக்கொள்ளும் சூழ்நிலையில்,நாட்டுக்கு நடந்த அழிவுகள் கண்ணெதிரே தெரிவதாகவும் இப்போதாவது அவசர முடிவுகள் எடுக்காமல் எதிர்க்கட்சிகளுக்கு அனைத்து உண்மைகளையும் வெளிப்படுத்தி, எதிர்க்கட்சியும் அரசாங்கமும் ஒரே குரலில் தேசிய கடன் மறுசீரமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவிக்க ஒன்றிணையுமாறும் பாராளுமன்றத்திலுள்ள 225 உறுப்பினர்களும் ஒரே குரலில் எதிர்ப்பை வெளிப்படுத்தும் பட்சத்தில்,சர்வதேச நாணய நிதியத்துக்குத் தெளிவான தாக்கத்தை ஏற்படுத்தினால் ஊழியர் சேம நிதியம்,ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை மற்றும் ஓய்வூதியம் உட்பட அனைவரின் வைப்புத் தொகைகளையும் பாதுகாக்க முடியும் என்றும் இதற்கு எதிர்க்கட்சி என்ற ரீதியில் பூரண ஆதரவை வழங்குவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்று (19) கூடிய எதிர்க்கட்சி ஒன்றியத்தின் செயற்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.அவர் மேலும் கூறியதாவது ,

சரியானதற்கு சரி என்று கூறினாலும் தவறானவற்றுக்கு உடன்படப்போவதில்லை.பல்வேறு தந்திர மந்திரங்களில் சிக்கிக் கொள்ளாமல் தாம் எடுத்த முட்டாள்த்தனமான முடிவுகளைஅவ்வாறே ஒப்புக் கொண்டு,புதிய வழியில் முன்னோக்கிச் செல்ல ஒன்றுபடவேண்டும். நாட்டு மக்களின் வைப்புத் தொகைகளின் பெறுமதியைப் பாதுகாக்கத் தயாராக இருந்தாலும் அரசாங்கம் சொல்வதெற்கெல்லாம் கை தூக்கத் தயாராக இல்லை.

சர்வதேச நாணய நிதியத்துடன் அரசாங்கம் செய்து கொண்ட ஒப்பந்தத்துடன் தொடர்பான தரவுகள் மற்றும் ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு எதிர்க்கட்சியாக ஐக்கிய மக்கள் சக்தியால் அப்போதைய நிதியமைச்சர் பசில் ராஜபக் ஷவிடம் பலமுறை கோரிக்கை விடுக்கப்பட்ட போதும் அவர் அதனை வழங்கவில்லை.ஒப்பந்தம் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருந்தால்,சர்வதேச நாணய நிதியத்துடன் அரசாங்கம் செய்து கொள்ளவுள்ள ஒப்பந்தம் மக்கள் தரப்பில் வலுப்படுத்தி முற்போக்காக செயல்படுத்தும் சாத்தியம் இருந்தும்,அது நடக்கவில்லை. இந்த தரவுகள் நாட்டுக்கும் பாராளுமன்றத்துக்கும் தெரியாமல் மறைக்கப்பட்டுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தியும் சர்வதேச நாணய நிதியத்துக்குச் செல்வதை ஏற்றுக்கொண்டாலும்,இந்த உடன்படிக்கைகளை வெளிநாட்டுக் கடனை மறுசீரமைப்பதன் மூலம் நடைமுறைப்படுத்த முடியும் என ஐக்கிய மக்கள் சக்தி நம்பினாலும் மத்திய வங்கியின் ஆளுநரும் நிதி இராஜாங்க அமைச்சரும் உள்நாட்டுக் கடனை மறுசீரமைக்கப் போவதில்லை எனத் தெரிவித்திருந்த போதிலும்,உள்நாட்டுக் கடனை மறுசீரமைப்பதாக ஜனாதிபதி கூறியமை ஆச்சரியமளிக்கிறது.

ஒரு நேரத்தில் ஒரு விடயத்தையும் மற்றொரு நேரத்தில் இன்னொரு விடயத்தையும் கூறி ஒன்றுக்கொன்று பரஸ்பர முரண்பாடான கருத்துக்களை கூறுவதில் அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையும் அற்றுப்போகிறது. உலகின் பெரும்பாலான நாடுகள் உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பை மேற்கொள்ளாது சர்வதேச நாணய நிதிய ஒப்பந்தங்களுக்குச் செல்லலாம் என்பதிலும் இலங்கையால் இவ்வாறானதொரு ஒப்பந்தத்துக்குச் செல்ல முடியாது என்பதற்குமிடையில் ஏதோ மறைந்துள்ளது.

இந்த உடன்படிக்கைகளை மேற்கொள்வதற்கு முன்னர் அரசாங்கம் மக்களைப் பற்றியோ அல்லது பொதுநல வைப்புத்தொகைகள் மற்றும் பணிக்கொடை வைப்புத் தொகைகள் பற்றியோ சிந்திக்கவில்லை. முற்போக்கான எதிர்க்கட்சியாக இவ்வாறான தீர்மானங்களை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

# அமைச்சு பதவி தொடர்பில் பெரமுனவினர் அதிருப்தியில்

## இருந்தபோதும் மக்களுக்கு குறைவைக்க மாட்டோம் என்கிறார் சாகர காரியவசம்

தமக்கு கிடைக்கவேண்டிய அமைச்சுப் பதவிகள் கிடைக்காமை தொடர்பில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் சிலர் மனக் கவலையில் இருப்பதாக அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

அந்தக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று (19) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உறுப்பினர்களுக்கு பொறுப்புக்களை வழங்க வேண்டும் என்று ஜனாதிபதியாக ரணில் கடமை பொறுப்பேற்று சில தினங்களில் கோரியிருந்தோம். அதனை எழுத்து பூர்வமாகவும் அறிவித்திருந்தோம். ஆரம்பத்திலிருந்து அதுவே எங்களின் நிலைப்பாடாகவும் இருந்தது. அந்த கோரிக்கையில் தவறு இருப்பதாக நாங்கள் கருதவில்லை.

பொதுஜன பெரமுனவின் வேட்பாளராக இருந்த ஜனாதிபதி வேட்பாளருக்கே 69 இலட்சம் மக்களின் வாக்குகள் கிடைக்கப்பெற்றன. அதேபோன்று, மொட்டுக் கட்சிக்கே பாராளுமன்றத்திலும் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலம் கிடைத்தது.

இந்தக் கட்சியை இவ்வளவு தூரம் கட்டியெழுப்புவதற்கு மாவட்ட தலைவர்களே அர்ப்பணிப்புடன் செயற்பட்டார்கள். அவர்களுள் அநேகமானவர்கள் அவர்களின் மாவட்டங்களில் அதிக வாக்குகளைப் பெற்றுக்கொண்ட அரசியல்வாதிகளுமாவர். இந்த அரசாங்கம் ஆட்சி அமைப்பதற்கும் தற்போதைய ஜனாதிபதி இந்த பதவிக்கு வருவதற்காகவும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு மக்கள் வரவேற்பை பெற்றுக்கொண்ட மக்கள் பிரதிநிதிகளுக்காக அந்த கோரிக்கையை முன்வைத்திருந்தோம்.

இன்றும் அந்த நிலைப்பாட்டிலேயே இருகிறோம். அதில் தவறு என்று நாங்கள் கருதவில்லை. அந்த சந்தர்ப்பத்தில் நாங்கள் கோரிக்கை முன்வைத்திருந்தாலும் ஜனாதிபதியே அதுகுறித்து தீர்மானங்களை எடுக்க வேண்டும். எவ்வாறாயினும், அந்த கோரிக்கையினால் நாட்டு மக்களுக்கு கிடைக்கவிருக்கும் நிவாரணங்களை இல்லாமலாக்குமளவுக்கு கீழ்த்தரமான முறையில் செயற்பட எங்களின் கட்சி தயாராக இல்லை.

கட்சிக்கு கிடைக்க வேண்டிய உரிமைகள் கிடைக்காவிட்டாலும் மக்களுக்கு கிடைக்கவேண்டிய உரிமைகளுக்காக போராடவும் ஒற்றுமையாக செயற்படவும் நாங்கள் தயாராக இருக்கிறோம்.

மாவட்டத் தலைவர்கள் அமைச்சுப் பதவிகளுக்கான எதிர்பார்ப்பில் இருக்கிறார்கள். அவர்களின் எதிர்பார்ப்பிலும் தவறு இல்லை. தமக்கு ஆதரவளித்த மக்களுக்காக சேவையாற்ற வேண்டும் என்ற நிலைப்பாடும் அவர்களுக்கு இருக்கிறது. ஒருசில அரசியல்வாதிகள் மனக்கவலையிலேயே இருக்கிறார்கள். இருந்தபோதும், அது வேறு விடயமாகும். ஆனால், அதற்கும் மக்களுக்காக ஆற்றும் சேவைக்கும் இடையில் தொடர்பு இல்லை என்பதை தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

# ஒளி, ஒலிபரப்பு சட்டமூலத்தால் இலங்கைக்கு பாரிய அவப்பெயர்

## ஜீ.எல். பீரிஸ் தெரிவிப்பு

அரசாங்கம் கொண்டுவர முயற்சிக்கும் ஒளி, ஒலிபரப்பு அதிகாரசபை சட்ட மூலத்தால், சர்வதேச மட்டத்தில் இலங்கைக்கு பாரிய கறுப்பு கறைஏற்படும். இது மிகவும் பாரதூரமான நிலைமையாகும். இதற்கு ஜெனீவா கூட்டத்தொடர்பில் இலங்கை விளக்கமளிக்க நேரிடும் என்று சுதந்திர மக்கள் காங்கிரஸின் முக்கியஸ்தரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.

அந்த கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று (19) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 53 ஆவது கூட்டத்தொடர் ஆரம்பமாகியுள்ளது. இன்னுமிரு தினங்களில் மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கை தொடர்பான அறிக்கையை சமர்ப்பிக்கவுள்ளார். அண்மையில், இலங்கை தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையினால் எமது நாட்டுக்கு பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டது. குறிப்பாக மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பாரிய சிக்கலை சந்தித்திருந்தோம்.

எனவே, அரசாங்கத்தினால் திட்டமிட்டு முன்னெடுக்கப்பட்டு வரும் ஊடக அடக்குமுறைக்கான வேலைத்திட்டத்தினால் அந்த நிலைமை மீண்டும் தீமையை ஏற்படுத்தும். இது தொடர்பில் ஜெனீவா கூட்டத்தொடரில் கட்டாயம் கவனம் செலுத்தப்படும். அதனை தவிர்க்க முடியாது.

அதன் பிரதிபலனான, சர்வதேச மட்டத்தில் இலங்கையின் மறுபக்கத்துக்கு பாரிய கறுப்பு கறை ஏற்படும். இது மிகவும் பாரதூரமான நிலைமையாகும். ஒளி,ஒலிபரப்பு அதிகாரசபை சட்டமூலத்தை முன்னோக்கிக் கொண்டுச் செல்வதில் அரசாங்கம் மிகவும் ஆர்வம் காட்டி வருகின்றது என்பது தெளிவாக தெரிகிறது. இது சட்டம் இல்லை சட்ட மூலத்துக்கான யோசனை மாத்திரமே என்று ஆளுந்தரப்பு உறுப்பினர்கள் கூறுகிறார்கள். அதில் உண்மை இல்லை. சட்டத்துக்கான பிரதியையே சமர்ப்பித்திருக்கிறார்கள்.

எதற்காக இவ்வளவு அவசரமாக இந்த சட்டமூலத்தை நிறைவேற்ற முயற்சிக்கிறார்கள் என்பது புரியவில்லை என்றார்.

### ஜூன் 29 இல்...

புனித துல்ஹஜ் மாதத்துக்கான தலைப்பிறையை தீர்மானிக்கும் மாநாடு நேற்று மஃரிப் தொழுகையின் பின்னர் கொழும்பு பெரிய பள்ளிவாசலில் இடம்பெற்றது. இக்கூட்டத்தில் பிறைக்குழுவின் உறுப்பினர்கள், அகில இலங்கை ஜம்மிய்யத்துல் உலமா சபை உறுப்பினர்கள், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### கோட்டாவுக்கு...

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன ஆளுங்கட்சி என்ற அடிப்படையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்க தாம் தயாராக இருப்பதாகவும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு நேர்ந்ததை ரணிலுக்கும் நேர இடமளிக்கப்போவதில்லை என்றும் அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் நாவலப்பிட்டி தொகுதி ஒன்றுகூடல் நேற்று முன்தினம் (18) இடம்பெற்றது. அந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

கடந்து போன நாட்களை எடுத்துக்கொண்டால் நானே ஜனாதிபதியுடன் தொடர்ந்து முரண்பட்டுக்கொண்டிருந்தேன். ஆனால், கட்சி என்ற அடிப்படையிலும் பாராளுமன்றக்குழு என்ற அடிப்படையிலும் எதிர்வரும் இரண்டரை வருடங்களில் இந்த நாட்டை கட்டியெழுப்புவதற்கும் பொருளாதாரத்தை பலப்படுத்துவதற்குமான வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கான முழு ஒத்துழைப்பை நாங்கள் பெற்றுக்கொடுப்போம்.

கோட்டாபய ராஜபக்ஷவுக்கு நேர்ந்ததை ரணில் விக்கிரமசிங்கவுக்கும் நேர்வதற்கு இடமளிக்க மாட்டோம். நாட்டில் கடந்த காலங்களில் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க முகப்புத்தக ஜனாதிபதியாக இருந்தார். நாவலப்பிட்டிய பிரதேசத்தில் மக்கள் சந்திப்பொன்றை நடத்த சென்றிருந்தார். ஆனால், அவர்களுக்கு நாவலப்பிட்டியவில் அவ்வளவு மக்கள் பலத்தை காண்பிக்க முடியாமல் போனதாகவும் சுட்டிக்காட்டினார்.

### விலை அதிகரிப்புக்கு...

லொத்தர் சீட்டொன்றின் விலை 40 ரூபாவாக அதிகரிக்கப்பட்டு விற்பனை முகவர்களுக்கு பெற்றுக்கொடுக்கப்படும் தரகு கொடுப்பனவை 8 ரூபா வரையிலும், விற்பனை உதவியாளர்களின் தரகுக் கொடுப்பனவை அதிகரித்தல் மற்றும் லொத்தர் சீட்டு கொள்வனவு செய்யும் மக்களுக்கான பரிசில்களின் எண்ணிக்கையை அதிகரித்தல் உள்ளிட்ட மேலும் சில கோரிக்கைகளை முன்வைத்தே இந்த எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

லொத்தர் விற்பனையிலிருந்து நீங்குவது தொடர்பில் தேசிய லொத்தர் சபை மற்றும் அபிவிருத்தி லொத்தர் சபை நிர்வாகப்பிரிவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்வரும் 06 ஆம் திகதிக்கு முன்னர் தமது கோரிக்கைக்கு சாதகமான பதில் வழங்கப்பட வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

### இன்று கூடுகிறது...

இந்நிலையில், இன்று பிற்பகல் 5.00 மணிக்கு தனியார் உறுப்பினர் சட்டமூலமான பலப்பிட்டிய ஸ்ரீ ராஹுலராம புராண விஹாரஸ்த்த சாமனேர ஆகல்ப சங்வர்தன பிக்கு கல்லூரி (கூட்டிணைத்தல்) சட்டமூலம் இரண்டாம் மதிப்பீட்டுக்குப் பிரேரிக்கப்படும்.

இதேவேளை, ஜூன் 21ஆம் திகதி முற்பகல் 9.30 மணி முதல் பிற்பகல் 5.30 மணிவரை ஊழல் எதிர்ப்பு சட்டமூலம் இரண்டாம் மதிப்பீடு, குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு சட்டமூலம் இரண்டாம் மதிப்பீடு மற்றும் குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் இரண்டாம் மதிப்பீடு ஆகியவை தொடர்பான விவாதம் இடம்பெறவுள்ளன.

பின்னர் பி.ப 5.30 மணிக்கு அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் கீழ் தீர்மானம் விவாதமின்றி அங்கீகரிக்கப்படவுள்ளது.

ஜூன் 22 ஆம் திகதி வியாழக்கிழமை 2023.06.01 அன்று பொதுமக்களுக்கு ஆற்றிய உரை தொடர்பில் எதிர்க்கட்சி கொண்டுவரும் சபை ஒத்திவைப்பு விவாதத்தை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகப் பாராளுமன்ற செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

### செப். 15க்குள்...

இல்லாவிட்டால் 2018 ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட மாகாணசபைத் தேர்தல் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட எல்லை நிர்ணய அறிக்கையை மீளாய்வு செய்து அதன் பிரகாரம் தேர்தலை நடத்தவேண்டும். எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் உள்ளூராட்சிமன்றம் மற்றும் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான திகதி தொடர்பான இறுதி முடிவை அரசாங்கம் அறிவிக்க வேண்டும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவரும் தேசிய எல்லை நிர்ணய குழுவின் தலைவருமான மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

மாகாண சபைகள் அரசியலமைப்பு ரீதியாக அங்கீகாரம் பெற்ற நிர்வாக அலகு என்பதால் அந்தத் தேர்தலை உரிய முறையில் நடத்த வேண்டும் என்பது அவசியமாகும். ஆகவே, நத்தார் பண்டிக்கைக்கு முன்னர் இவ்விரு தேர்தல்களை அல்லது ஏதாவது ஒன்றை நடத்துவார்கள் என்ற எதிர்பார்ப்பில் தான் இருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றின்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையை பொறுத்தவரையில் உள்ளூராட்சிமன்றங்கள் மற்றும் மாகாண சபைகளுமே அதிகாரத்தை பிரயோகிக்கக் கூடிய நிறுவனங்களாக இருக்கின்றன. இந்த நடைமுறை எல்லா உலக நாடுகளிலும் இருக்கும் அரச நிர்வாக கட்டமைப்புகளாகும். மத்திய அரசு அல்லது ஆளுநர்கள், செயலாளர்கள் மற்றும் ஆணையாளர்களின் நிர்வாகத்தில் உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாணசபைகள் செயற்படுவது தவறு என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவராக இருந்த காலப்பகுதியிலிருந்து கூறி வருகிறேன்.

செயலிழந்துள்ள மாகாண சபைகள் குறித்து நடவடிக்கை எடுக்க இரு செயன்முறைகள் இருக்கின்றன. அதிலொன்று என்னவென்றால், பழைய தேர்தல் முறைமையிலேயே மாகாண சபைத் தேர்தலை நடத்துவோம் என்த தனிநபர் யோசனையொன்று பாராளுமன்ற உறுப்பினரால் முன்வைக்கப்பட்டுள்ளது. ஆகவே, அந்த யோசனையின் பிரகாரம் தற்போதிருக்கும் 2017ஆம் ஆண்டு இலக்கம் 17 சட்டத்தை நீக்கி பழைய 1988 இலக்கம் 02 என்ற சட்டத்துக்கு அதிலுள்ளவாரே சட்ட அங்கீகாரம் வழங்கி விகிதாசார முறையுடன் கூடிய விகிதாசார தேர்தல்முறைக்கு செல்வதாகும்.

மற்றைய மாற்றத் தீர்வு என்னவென்றால், மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்காக தொகுதி எல்லையை நிர்ணயித்து 2018 ஆம் ஆண்டு பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்ட எல்லைநிர்ணய அறிக்கை இன்னும் பாராளுமன்ற அனுமதியை பெறவில்லை. எனவே, அந்த அறிக்கையை ஐவரடங்கிய குழுவைக் கொண்டு மீளாய்வு செய்திருக்கவேண்டும். இருந்தபோதும், 2018 ஆம் ஆண்டு இடம்பெற்ற அரசியல் நெருக்கடியினால் அதனை செய்ய முடியாமல் போயிருந்தது.

அதனால், பாராளுமன்ற குழுவின் ஒப்புதலுடன் மீண்டும் மீளாய்வு குழுவொன்றை நியமித்து அந்த அறிக்கையை மீளாய்வு செய்யவேண்டும். அவ்வாறு மீளாய்வு செய்தால் ஐம்பதுக்கு ஐம்பது என்ற அடிப்படையில் கலப்பு விகிதாசார முறையில் தேர்தலை நடத்த முடியும்.

எனவே, பழைய முறைக்குச் செல்லுதல் அல்லது மீளாய்வு குழுவொன்றை நியமித்து தேர்தலை நடத்துதல் ஆகிய இரண்டு முறைகளே தேர்தலை நடத்துவதற்கான மாற்றுத் தீர்வுகளாகும்.எது எவ்வாறாயினும், திருடப்பட்டுள்ள மாகாண சபைத்தேர்தலை எப்படியாவது கண்டுபிடித்து தேர்தலை நடத்தியேயாகவேண்டும்.

அதற்கு காரணம் அரசியலமைப்பில் மாகாண சபை என்றொன்று இருக்கிறது. மாகாண சபையைத் தேர்தலை நடத்தாமலிருப்பது அல்லது காலந்தாழ்த்துவது அரசியலமைப்புக்கு முரணானது என்பதுடன் அது பாரதூரமான மனித உரிமை மீறலாகவும் கருதப்படுகின்றது. 1997 ஆம் ஆண்டு இடம்பெற்ற வழக்கு தீர்ப்பின்படி, உயர் நீதிமன்றமும் இதனை ஒப்பிக்கும் வகையிலான தீர்வுகளை வழங்கியுள்ளது.

உலக ஜனநாயக தினமாக கருதப்படும் செப்டெம்பர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் இவ்விரு தேர்தல்களையும் நடத்துவதற்கான திகதி குறித்தான தீர்மானத்தை அரசாங்கம் அறிவிக்க வேண்டும். நத்தார் பண்டிகைக்கு முன்னர் இவ்விரு தேர்தல்களையும் அல்லது ஏதாவது ஒரு தேர்தலையாவது நடத்துவர்கள் என்ற எதிர்பார்ப்பில் இருக்கிறேன் என்றார்.

### விமலுக்கு...

இலங்கைக்கு விஜயம் செய்த போது, கொழும்பிலுள்ள ஐ.நா. அலுவலகத்துக்கு முன்பாக வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமையூடாக பொதுமக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்திய குற்றச்சாட்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு கொழும்பு பிரதம நீதவான் பிரசன்ன டி அல்விஸ் முன்னிலையில் நேற்று (19) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கின் முதலாவது சந்தேகநபராக பெயர் குறிப்பிடப்பட்டுள்ள விமல் வீரவங்ச மன்றில் ஆஜராகியிருக்கவில்லை.

வழக்கின் மற்றுமொரு பிரதிவாதியான வீரகுமார திசாநாயக்கவும் மன்றில் ஆஜராகாத போதிலும் அவர் சார்பில் சட்டத்தரணிகள் ஆஜராகி மருத்துவ அறிக்கையை சமர்ப்பித்தனர்.

வழக்கின் ஏனைய பிரதிவாதிகளான மொஹமட் முசம்மில், ஜயந்த சமரவீர, ரோஜர் செனவிரத்ன, பியசிறி விஜேநாயக்க ஆகியோர் மன்றில் ஆஜராகியிருந்தனர்.

வழக்கு இடம்பெறும் அனைத்து நாட்களிலும் பிரதிவாதிகள் ஒருவருக்கு ஒருவராக, மாறி மாறி மன்றில் ஆஜராகாத காரணத்தினால் வழக்கை விசாரணை செய்வதற்கு உரிய தினத்தை நியமிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக நீதவான் இதன்போது அறிவித்துள்ளார்.

பிரதிவாதிகள் வழக்கில் ஆஜராகாமல் புறக்கணிப்பார்களாயின், அனைத்து சந்தேகநபர்களையும் விளக்கமறியலில் வைத்து வழக்கு விசாரணையை நடத்த நேரிடும் என பகிரங்க நீதிமன்றத்தில் நீதவான் அறிவித்துள்ளார்.

இந்த வழக்கு விசாரணை எதிர்வரும் செப்டெம்பர் 11 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

### 10,500 சிறுவர்...

மதிப்பீடுகள் தொடர்பான அறிக்கையிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இந்த காலப்பகுதியில் அம்பாறை மாவட்டத்தில் 234 சம்பவங்களும் அநுராதபுரம் மாவட்டத்தில் 597 சம்பவங்களும் பதுளை மாவட்டத்தில் 277 சம்பவங்களும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 160 சம்பவங்களும் கொழும்பு மாவட்டத்தில் 1,708 சம்பவங்களும் காலி மாவட்டத்தில் 703 சம்பவங்களும் கம்பஹா மாவட்டத்தில் 1,027 சம்பவங்களும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் 395 சம்பவங்களும் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 166 சம்பவங்களும் பதிவாகியுள்ளன.

மேலும், களுத்துறை மாவட்டத்தில் 585 சம்பவங்களும் கண்டி மாவட்டத்தில் 458 சம்பவங்களும் கேகாலை மாவட்டத்தில் 344 சம்பவங்களும் கிளிநொச்சி மாவட்டத்தில் 87 சம்பவங்களும் குருநாகல் மாவட்டத்தில் 791 சம்பவங்களும் மன்னார் மாவட்டத்தில் 56 சம்பவங்களும் மாத்தளை மாவட்டத்தில் 239 சம்பவங்களும் மாத்தறை மாவட்டத்தில் 388 சம்பவங்களும் மொனராகலை மாவட்டத்தில் 284 சம்பவங்களும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 104 சம்பவங்களும் நுவரெலியா மாவட்டத்தில் 195 சம்பவங்களும் பொலன்னறுவை மாவட்டத்தில் 263 சம்பவங்களும் புத்தளம் மாவட்டத்தில் 435 சம்பவங்களும் இரத்தினபுரி மாவட்டத்தில் 652 சம்பவங்களும் திருகோணமலை மாவட்டத்தில் 156 சம்பவங்களும் வவுனியா மாவட்டத்தில் 81 சம்பவங்களும் நாடு முழுவதிலும் 112 சம்பவங்களும் பதிவாகியுள்ளதாக அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த சம்பவங்களின் அடிப்படையில், 07 ஆபாசமான வெளியீடுகள் தொடர்பான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. பலவந்தமாக யாசகம் எடுக்க வைத்தது தொடர்பில் 249 சம்பவங்கள் பதிவாகியுள்ளதுடன் சிறுவர்களுக்கு பாலியல் துன்புறுத்தல் செய்தது தொடர்பில் 25 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை குறிப்பிட்டுள்ளது. மேலும், தடைசெய்யப்பட்ட பொருட்களை கடத்தியமை தொடர்பில் 41 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

சிறுவர்களை கொடுமைப்படுத்திய சம்பவங்கள் 2096 இடம்பெற்றுள்ளன. சிறுவர் துஷ்பிரயோகங்களில் கொடுமைப்படுத்தும் சம்பவங்களே அதிகளவில் இடம்பெற்றுள்ளதாக அதிகாரசபை சுட்டிக்காட்டுகின்றது. இதேவேளை, 729 பாலியல் துன்புறுத்தல்களும் 131 சட்டபூர்வமான பாதுகாப்பிலிருந்து கடத்துதலும் 171 கடத்தல் சம்பவங்களும் 131 தடுத்துவைக்கும் வகையிலான சம்பவங்களும் 167 பாலியல் வல்லுறவு சம்பவங்களும் உறவுமுறைசார் மீறலும் 185 கடுமையான பாலியல் துஷ்பிரயோகங்களும் 2005 சிறுவர்களை புறக்கணிப்பது தொடர்பான சம்பவங்களும் சிறுவர்களை தொழிலுக்கு அமர்த்துவது தொடர்பில் 214 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

கட்டாய கல்வியை மீறியமை தொடர்பில் 1231 சம்பவங்களும் உள்நாட்டு வன்முறைகள் தொடர்பில் 82 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளதுடன் 229 சிறுவர்கள் இளம் குற்றவாளிகளாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றுக்கு மேலதிகமாக 2802 சிறுவர் துஷ்பிரயோகம் அல்லது சிறுவர் உரிமை மீறல்கள் பதிவாகியுள்ளதாக அதிகார சபை சுட்டிக்காட்டியுள்ளது.

### சந்தையில்...

அவதானத்துடன் செயற்படுமாறும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

உண்மையான சிவப்பு சீனி ஈரப்பதன், பிசுபிசுப்பு தன்மையைக் கொண்டிருப்பதுடன் அந்த சீனியை நீண்ட நாட்களுக்கு களஞ்சியப்படுத்த முடியாது என்று அந்தச் சங்கத்தின் பொருளாளர் ரொஷான் குமார தெரிவித்தார். இதுதொடர்பில் நேற்று முன்தினம் (18) ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் தற்போதைய நாட்களில் சந்தைகளில் சீனி விலை அதிகரித்துள்ளது. வெள்ளை சீனியின் விலையை போன்றே சிவப்பு சீனியின் விலையும் அதிகரித்துள்ளது. சிவப்பு சீனி உற்பத்தி செய்யப்பட்டதன் பின்னர் இடம்பெறும் செயன்முறைகளுக்கு அடுத்ததாகவே வெள்ளை சீனி உற்பத்தி செய்யப்படுகிறது. அதனடிப்படையில், வெள்ளை சீனியின் விலை அதிகரித்து சிவப்பு சீனியே குறைந்த விலைக்கு விற்பனை செய்யப்பட வேண்டும்.

நுகர்வோரிடம் சிவப்பு சீனிக்கு இருக்கும் கேள்வி நிலையை பயன்படுத்திக்கொள்ளும் சில வியாபாரிகள் ,வெள்ளை சீனிக்கு நிறமூட்டி சிவப்பு சீனியாக்கி விற்பனை செய்யப்படுகின்றன. இவ்வாறான சில சம்பவம்களும் இடம்பெற்றுள்ளன. அதனால், பயன்பாட்டுக்கு சீனி வகையை தெரிவு செய்யும்போது, அநேகமான சந்தர்ப்பங்களில் சிவப்பு சீனி என்று எண்ணி நிறமூடப்பட்ட வெள்ளை சினியாக இருக்கலாம். ஆகவே, இதுதொடர்பில் சம்பந்தபட்ட பிரதேசத்துக்கு உட்பட்ட பொது சுகாதார அதிகாரியொருவரினூடாக பரிசோதனைகளை மேற்கொள்ள முடியும். குறிப்பாக இயற்கையான சிவப்பு சீனியில் சற்று ஈரப்பதன் இருக்கும். நீண்டகாலம் வைத்திருக்க முடியாத தன்மையும் இருக்கும். அதற்கு மேலதிகமாக இந்த சீனி சற்று பிசு பிசுப்புத் தன்மை கொண்டதாகவும் இருக்கும். இவற்றில் எந்த தன்மையும் இல்லாமல் மிகவும் காய்ந்த நிலையில் சிவப்பு அல்லது கபில நிற சீனி இருக்குமாக இருந்தால் அது நிறமூட்டப்பட்ட வெள்ளை சீனியாக இருக்கலாம். ஆகவே, அவ்வாறான நிறமூட்டப்பட்ட வெள்ளை சீனி உடல்நலத்துக்கு தீங்கு ஏற்படுத்துவதற்கான வாய்ப்புகளும் இருக்கின்றன. எனவே இவ்வாறான உணவுகளைத் தெரிவு செய்யும்போது இந்த விடயங்கள் குறித்து கவனத்துடன் செயற்படுமாறும் அவர் குறிப்பிட்டார்.

### வரி செலுத்தத்...

அந்த ஆண்டு 129 கோடி ரூபா வரி செலுத்தப்பட வேண்டுமெனவும் மேலதிக தொகை தாமதக் கட்டணமாக பெற வேண்டியுள்ளதாகவும் கணக்காய்வு அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

குறித்த மதுபான உற்பத்தி நிறுவனம் மீண்டும் செயற்பாட்டைத் தொடங்குவதற்கு 10 கோடி ரூபாவை செலுத்துவதற்கும் மீதமுள்ள தொகையை 24 தவணைகளில் செலுத்தவும் கடந்த 2021 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 23 ஆம் திகதி சம்மதம் வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### பெற்றோரால்...

கொழும்பு, கோட்டையிலிருந்து பதுளை நோக்கிச் சென்ற இரவு தபால் ரயிலில் பயணித்த அநுராதபுரம் பகுதியைச் சேர்ந்த மொஹமட் அம்பர் என்ற பாடசாலை மாணவன் ஹட்டன் ரயில் நிலையத்தில் இறங்கி நின்றபோதே குறித்த சிறுவனை பொலிஸார் தமது பாதுகாப்பில் எடுத்துள்ளனர்.

தனது பெற்றோர் அநுராதபுரத்தில் வசிப்பதாகவும் தனது குடும்பத்தில் மூத்த சகோதரனும் சகோதரியும் இருப்பதாகவும் குறித்த சிறுவன் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

பாணந்துறை பிரதேசத்தில் உள்ள தனது பாட்டி வீட்டில் தங்கியிருந்து தான் பாடசாலை கல்வியை பெற்றதாகவும் 10 ஆம் ஆண்டு வரை கல்வி கற்கும் போது பாடசாலையில் இருந்து நீக்கப்பட்டதாகவும் குறித்த மாணவன் தெரிவித்துள்ளதாக பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

# பிரான்ஸ் சென்ற பொலிஸ் கான்ஸ்டபிள் மாயம்

பிரான்ஸில் இடம்பெற்ற சர்வதேச பொலிஸ் சங்கத்தின் (IPA) உச்சி மாநாட்டில் கலந்து கொண்ட இலங்கை பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் மாயமாகியுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

மேல்மாகாண பொலிஸ் போக்கு வரத்துப் பிரிவில் கடமையாற்றும் குறித்த பொலிஸ் கான்ஸ்டபிள் கடந்த மே மாதம் நாடு திரும்பத் திட்டமிடப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், உச்சிமாநாட்டில் கலந்து கொண்ட பிறகு அவர் திரும்பாமை குறித்து மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் குறித்த பொலிஸ் கான்ஸ்டபிள் பிரான்சில் தங்கியிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இந்நிலையில் மேல்மாகாண பொலிஸ் போக்குவரத்துப் பிரிவினால் சனிக்கிழமை (17) குறித்த உத்தியோகத்தர் பதவியிலிருந்து விலகியதாகக் கருதப்படும் சுற்றறிக்கையொன்றும் வெளியிடப்பட்டது.

இதேவேளை கடந்த வாரம், ஐக்கிய இராச்சியத்தில் இடம்பெற்ற மாநாடு ஒன்றில் கலந்து கொண்ட இலங்கை பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஐந்து பேர் நாடு திரும்பாமை குறிப்பிடத்தக்கது.

## முகாமில் உயிரிழந்த இலங்கை தமிழ்ப் பெண்

# கிரியைகளை நடத்த தகன நிலையத்தை வழங்கமறுத்த இந்தோனேஷியத் தமிழர்கள்!



இந்தோனேஷியா அகதி முகாமில் நோய்வாய்ப்பட்டு இறந்த ஈழத்தமிழ் அகதிப் பெண்ணின் உடலை, தமது தகன நிலையத்தில் எரிக்க அனுமதிக்க முடியாது என அங்குள்ள தமிழர்கள் மறுத்துள்ளனர்.



இதையடுத்து, இந்தோனேஷியாவில் வாழும் சீக்கிய சமூகத்தினர் தமது தகன நிலையத்தில் இந்துப் பாரம்பரியங்களுடன் ஈழப் பெண்ணின் சடலத்தை தகனம் செய்ய முழு ஏற்பாடும் செய்துள்ளனர்.

## இறுதியில் சீக்கியர்கள் கைகொடுத்தனர்

கடந்த 2012 ஆம் ஆண்டு இலங்கையிலிருந்து கடல் மார்க்கமாக பயணித்த ஈழத்தமிழ் புகலிடக் கோரிக்கையாளர்களின் படகொன்று இந்தோனேஷியாவில் தடுத்து நிறுத்தப்பட்டது. அதில் பயணம் செய்தவர்கள் இந்தோனேஷியாவில் மெடான் நகரில், பெலவான் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இவர்களுள் அசோக்குமார் - லலிதா தம்பதியினரும் அவர்களின் இரண்டு பிள்ளைகளும் அந்த முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் லலிதாவுக்கு கடுமையான நீரிழிவு நோய் ஏற்பட்டு, போதிய மருத்துவ வசதிகள் கிடைக்காமல் உயிரிழந்துள்ளார்.

இந்தோனேஷியாவில் ஏராளமாக இந்திய தமிழ் மக்கள் நீண்டகாலமாக வசிக்கிறார்கள். லலிதாவின் இறுதிச்சடங்கை அங்குள்ள இந்து மக்களின் தகன நிலையமொன்றில் நடத்துவதற்கு அங்குள்ள ஈழத்தமிழர்கள் அணுகியபோது, ஈழ அகதியின் உடலை எமது தகன நிலையத்தில் தகனம் செய்ய முடியாது என அவர்கள் மறுப்புத் தெரிவித்து விட்டனர் என அங்குள்ள ஈழத் தமிழர்கள் வேதனையுடன் தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து, பல தசாப்தங்களாக, அங்கே வசித்து வரும் இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த சீக்கிய சமூகத்தினரின் உதவியை ஈழத்தமிழர்கள் கோரியுள்ளனர்.

அவர்கள் உடனடியாக, அதற்கான ஏற்பாட்டை செய்து மனித நேயத்தோடு செயற்பட்டுள்ளார்கள்.

சீக்கியர்களின் தகன நிலையத்தில் லலிதாவின் இறுதிச்சடங்கு நடைபெற்றது. அவரது 11 வயது மகன் இறுதிக்கிரியைகளை நிறைவேற்றினார்.

# கைவிடப்பட்டது ஹைபொரஸ்ட் தோட்டத் தொழிலாளர்களின் பணிப் பகிஷ்கரிப்பு







(ஆ.ரமேஸ்)

மத்துரட்ட பெருந்தோட்டம் பிரவுன்ஸ் கம்பனி நிர்வாகத்தின் கீழ் இயங்கும் ஹைபொரஸ்ட் தோட்டம் இலக்கம் 02 பிரிவு தோட்டத் தொழிலாளர்கள் கடந்த 09ஆம் திகதி முதல் தோட்ட நிர்வாகத்துக்கெதிராக முன்னெடுத்து வந்த பணிப் பகிஷ்கரிப்பு போராட்டம் நேற்று 19ஆம் திகதி கைவிடப்பட்டுள்ளது.

நுவரெலியா மாவட்ட தொழில் திணைக்கள உதவி ஆணையாளர் உப்பாலி வீரசிங்க முன்னிலையில் மாவட்ட செயலக அதிசய கூட்ட மண்டபத்தில் நேற்றுக் காலை தொழிற்சங்க பிரமுகர்கள், தோட்ட முகாமையாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் ஆகியோர்களுக்கு இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் 60வீதமான பிரச்சினைகளுக்கு இணக்கப்பாடு எட்டப்பட்டதையடுத்து பணிப் பகிஷ்கரிப்பு முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.

இந்த பேச்சுவார்த்தையில் ஹைபொரஸ்ட் தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினைகளை தொழில் திணைக்களத்துக்கு முன்மொழிந்த பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்க பொதுச் செயலாளருமான வடிவேல் சுரேஸ், சங்கத்தின் நிர்வாக செயலாளர் எஸ்.பி.விஜயகுமார் உள்ளிட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். அத்துடன் இந்த பேச்சுவார்த்தையில் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான வீ.இராதாகிருஷ்ணன் உள்ளிட்ட முன்னணி பிரதிநிதிகள், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மாநில இயக்குநர் எம்.இராஜாராம் உள்ளிட்ட மாவட்ட, மாநில பிரதிநிதிகள், இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணி சார்பில் பிரதிநிதி பிரான்சிஸ் ராஜா ஆகியோரும் தோட்ட கம்பனி சார்பில் தோட்ட முகாமையாளர்கள் உள்ளிட்ட அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இதன்போது ஹைபொரஸ்ட் இலக்கம் 02 தோட்டத் தொழிலாளர்கள் தோட்ட நிர்வாக செயற்பாடுகளுக்கு எதிராக முன்வைத்த தொழில் உரிமை பிரச்சினைகள், நிர்வாகத்தால் இழைக்கப்பட்ட அநீதிகள் தொடர்பில் தோட்ட நிர்வாகத்துக்கும் தொழிற்சங்க பிரமுகர்களுக்கும் இடையில் வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றன.

இதில் மாவட்ட தொழில் திணைக்களத்தின் ஊடாக தீர்வு காணப்படக் கூடிய 60வீதமான பிரச்சினைகளுக்கு எழுத்து மூலம் தீர்வு பெறப்பட்டது.

அத்துடன் தொழில் அமைச்சு, பெருந்தோட்ட அமைச்சு மற்றும் உட்கட்டமைப்பு அமைச்சு ஊடாக காணக்கூடிய மேல்மட்ட பிரச்சினைகள் தொடர்பில் கொழும்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள், அமைச்சர்களுடன் கலந்துரையாடுவதற்கும் இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

பேச்சுவார்த்தையின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஸ், தோட்டத் தொழிலாளர்களின் மனித உரிமைகளை கம்பனிகள் மீறி செயற்படுகின்றன. தோட்டத் தொழிலாளர்கள் வஞ்சிக்கப்படும் வகையில் தான்தோன்றித்தனமாக தோட்டக் கம்பனிகள், நிர்வாகங்கள் செயல்படுகின்றன. அதேநேரத்தில் தோட்டத் தொழிலாளர்களுக்கு தற்போதுள்ள சட்டங்களில் திருத்தம் கொண்டு வர பெருந்தோட்ட அமைச்சர் மற்றும் ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு வந்து தொழிலாளர் மக்களின் கௌரவத்தை காப்பாற்ற பாடுபடுவேன். தோட்டத் தொழிலாளர்களின் 60வீதமான பிரச்சினைகளுக்கு தீர்வு எட்டப்பட்டுள்ளன. ஏனைய 40வீதமான பிரச்சினைகளுக்கு உயர்மட்டத்தில் தீர்வு காணப்படும் என்றும் தெரிவித்தார்.

இந்த பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வீ. இராதாகிருஷ்ணன் கருத்துரைக்கையில், தோட்டத் தொழிலாளர்களின் பிணக்குகள் தொடர்பில் தனியாக அமர்ந்து பேச தொழில் காரியாலய கூட்ட மண்டபம் இல்லாமல் மேலும் கீழும் மக்கள் அலைந்து திரிகின்றனர். எனவே, நுவரெலியாவில் தொழில் திணைக்கள கூட்ட மண்டபம் மற்றும் காரியாலயம் தனியாக அமைக்கப்பட வேண்டும்.

அத்துடன் ஹைபொரஸ்ட் தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினைகள் ஆராயப்பட்டுள்ளன. அவற்றுக்கு சுமுகமான தீர்வு காணப்படும் என்றார்.

# சவால்களை வெற்றிகொள்வதற்கு பணியாளர்களின் ஆதரவு அவசியம்

## பாராளுமன்ற செயலாளர் நாயகம் தெரிவிப்பு







எதிர்கொள்ளவிருக்கும் சவாலான காலங்களை வெற்றிகொள்ள பாராளுமன்றத்தின் அனைத்துப் பணியாளர்களினதும் ஆதரவை எதிர்பார்க்கின்றேன் என்று பாராளுமன்ற புதிய செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்தார்.

பாராளுமன்ற செயலாளர் நாயகமாகப் பதவியேற்ற பின்னர் அண்மையில் முதன்முறையாகப் பாராளுமன்ற பணியாளர்கள் மத்தியில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்கொள்ளவிருக்கும் சவாலான காலங்களை வெற்றிகொள்ள பாராளுமன்றத்தின் அனைத்துப் பணியாளர்களினதும் ஆதரவை எதிர்பார்க்கின்றேன்.

பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் இந்த நாட்டின் உயரிய நிறுவனமான பாராளுமன்றத்தின் பணிகளை அதிக வினைத்திறனுடன் முன்னெடுப்பதற்கு அனைத்துப் பணியாளர்களின் அதிகபசட்ச ஒத்துழைப்பு அவசியமாகும்.

எதிர்வரும் சில வருடங்களில் அதிகளவான அனுபவமிக்க பாராளுமன்ற பணியாளர்கள் ஓய்வு பெறவுள்ளார்கள். இந்நிலையில், ஏற்படும் சூழ்நிலைகளை நிர்வகித்து அதிகபட்ச சேவையை வழங்க பணியாளர்கள் ஒத்துழைக்க வேண்டும் .

அத்துடன், பாராளுமன்ற பணியாட் தொகுதியில் நிர்வாக சேவை அதிகாரிகளை ஆட்சேர்ப்பு செய்யவிருப்பதாக வெளியான செய்தியில் எவ்வித உண்மையும் இல்லையெனவும் அவர் தெரிவித்தார்.

## தினசரி பலாபலன்கள்

**சோபகிருது வருடம் ஆனி மாதம் 05ஆம் நாள்**
**செவ்வாய்க்கிழமை**

**மேஷம்:** குடும்பத்தின் மகிழ்ச்சியே முக்கியம் என கருதி அதற்கான திட்டங்களைத் தீட்டுவீர்கள். தைரியமாக செயற்படுவீர்கள்.

**ரிஷபம்:** காலையில் இருந்த குழப்ப நிலை மாலையில் இருக்காது. எப்படியாவது இன்று உங்கள் காரியங்களை சாதித்துவிடுவீர்கள்.

**மிதுனம்:** உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொண்டால் வெற்றி நிச்சயம் உண்டு. காரியத்தடைகளை எப்படியாவது சமாளித்துவிடுவீர்கள்.

**கடகம்:** நண்பர்களின் சந்திப்பால் அதிர்ஷ்டங்களை அடைவீர்கள். சுப காரிய நிமித்தம் சிற்சில செலவுகளை செய்ய வேண்டியது கட்டாயம்.

**சிம்மம்:** தொழில், வியாபாரத்தில் நீங்கள் எதிர்பார்த்திருந்த சலுகைகள் கிடைக்கும். எதிர்ப்பாராத பயணங்களால் விரயங்கள் உண்டு.

**கன்னி:** புதிய தொழில் முயற்சிகளால் அதிக இலாபங்களை அடைவீர்கள். எதிர்ப்பாராத தன அதிர்ஷ்டங்கள் உண்டு.

**துலாம்:** தடைப்பட்டிருந்த பயணங்கள் இன்று நல்லபடியாகக் கைகொடுக்கும். தொழில் வகையில் அதிக பாராட்டுகளைப் பெறும் நாள்.

**விருச்சிகம்:** திட்டமிட்டு எதையும் இன்று ஆரம்பிக்காதீர்கள். கோபத்தால் புத்தி தடுமாற்றம் ஏற்பட வாய்ப்புண்டு.

**தனுசு:** கூட்டுறவால் நன்மைகளும் இலாபங்களும் உண்டு. என்றாலும் மாலையில் அதிக மனச் சங்கடங்களுடன் காணப்படுவீர்கள்.

**மகரம்:** ஏதாவது உடல் நோயால் தொந்தரவுகள் ஏற்படலாம். அல்லது மறைமுக எதிரிகளின் தொல்லைகளுக்கு ஆளாவீர்கள்.

**கும்பம்:** திடீர் அதிர்ஷ்டம் மற்றும் போட்டி இலாபங்களால் மன நிறைவு கொள்வீர்கள். பிள்ளைகளின் தேவைக்காக கடன் வாங்குவீர்கள்.

**மீனம்:** உறவினர் நண்பர்களின் பூரண ஆதரவோடு காரியங்களைச் சாதிப்பீர்கள். வீட்டுக்கான செலவுகள் உண்டு.

**திதி:** துவிதியை பி.ப.1.07 வரை பின் திருதியை (வளர்)
**நட்சத்திரம்:** புனர்பூசம் பி.ப.10.36 வரை பின் பூசம்
**யோகம்:** சித்தாமிர்த யோகம்
**வார சூலை:** வடக்கு திசை நோக்கி சுபகாரியம் கூடாது
**நல்லநேரம்:** மு.ப. 7.52– 8.52 மணிவரை
**ராகுகாலம்:** 2.52 – 4.22 மணிவரை
**எமகண்டம் :** 8.52–10.22 மணிவரை
**குளிகை** :11.52– 1.22 மணிவரை
**சந்திராஷ்டமம்:** விருச்சிக - தனுசு ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்
**தனஅதிஷ்டம்:** திருவாதிரை,சுவாதி,சதயம் (பிறந்தவர்களுக்கு)
**விஷேட தினம்:** -------

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

# இந்திய கடற்படையின் வாஹிர் நீர்மூழ்கிக் கப்பல் கொழும்பு வருகை



"பூகோள சமுத்திர வளையம்" என்ற தொனிப்பொருளின்கீழ் முன்னெடுக்கப்படும் சர்வதேச யோகா தினத்தின் 9ஆவது பதிப்பை அனுஷ்டிக்கும் முகமாக இந்திய கடற்படையின் நவீன தயாரிப்பான கல்வாரி வகை நீர்மூழ்கிக் கப்பலான 'வாஹிர் 2023' 19ஆம் திகதி முதல் 22ஆம் திகதிவரை கொழும்புக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளது.

இவ்விஜயத்தின் ஓர் அங்கமாக குறித்த இந்திய கடற்படை நீர்மூழ்கிக் கப்பலின் கட்டளைத் தளபதி திவாகர், மேற்கு கடற் பிராந்திய கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் சுரேஸ் டி சில்வாவை சந்திக்கவுள்ளார். அத்துடன் குறித்த நீர்மூழ்கிக் கப்பலை பொதுமக்களும் பாடசாலை மாணவர்களும் பார்வையிட முடியுமென்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு சுவாமி விவேகானந்தா கலாசார நிலையத்துடன் இணைந்து இந்திய உயர்ஸ்தானிகராலயம் ஒழுங்கு செய்துள்ள நிகழ்வும் நாளை 21ஆம் திகதி கொழும்பு துறைமுகத்தில் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் இந்திய மற்றும் இலங்கை கடற்படைகளின் உயரதிகாரிகள், சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரிகள் பங்கேற்கவுள்ளனர். உலகளாவிய ரீதியில் தெரிவுசெய்யப்பட்ட துறைமுகங்களை இணைத்து 'பூகோள சமுத்திர வளையம்' என்ற வலையமைமைப்பை நிறுவும் தனித்துவமிக்க முன்னெடுப்பாக இடம்பெறும் இந்த யோகா அமர்வுகளில் இந்தியக் கடற்படையினர் பங்கேற்கின்றனர், அத்துடன் இந்தியாவின் ஜி20 தலைமைத்துவத்துக்கான தொனிப்பொருளான 'வசுதைவ குடும்பகம்' அல்லது 'ஒரே பூமி, ஒரே குடும்பம், ஒரே எதிர்காலம்' ஆகியவற்றை எதிரொலிக்கும் வகையில் பொது ஆரோக்கியம் என்ற அடிப்படையில் உலகெங்கிலுமுள்ள மக்களை யோகா ஒன்றிணைக்கின்றது.

இதேபோல அண்மையிலும் இந்தியக் கடற்படைக் கப்பல்களான டில்லி, சுகன்யா, கில்தான் மற்றும் சாவித்ரி ஆகியவையும் இவ்வருட முற்பகுதியில் கொழும்பு மற்றும் திருகோணமலைக்கு விஜயம் மேற்கொண்டிருந்ததுடன் இலங்கை கடற்படையுடன் இணைந்து யோகா அமர்வுகளும் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தமை நினைவில்கொள்ளத்தக்கது. 2023 ஜூனில், சுவாமி விவேகானந்தா கலாசார நிலையத்தால் இலங்கையின் ஐந்து நகரங்களில் மூன்று நாள் யோகா பயிற்சிப் பட்டறை நடத்தப்பட்டதுடன் இதில் இலங்கை ஆயுதப் படையினர் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது. இந்தியாவின் கொள்கையான அயலுறவுக்கு முதலிடம் கொள்கை மற்றும் 'பிராந்தியத்தில் அனைவருக்கும் பாதுகாப்பும் வளர்ச்சியும் (SAGAR)' ஆகியவற்றின் அடிப்படையில் இரு அயல் நாடுகளினதும் கடற்படைகளுக்கு இடையே சகோதரத்துவத்தையும் ஒற்றுமையையும் வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டே இந்திய கடற்படை கப்பல்கள் மற்றும் நீர்மூழ்கிக் கப்பல்கள் இலங்கைக்கு விஜயங்களை மேற்கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது.

ஜீனியர் தமிழன்
மாணவ மாணவிகளே!
புலமைப்பரிசில் மாணவர்களின் வெற்றிக்கு வழிவகுக்கும் முன்னோடி வினாத்தாள்கள் மற்றும் விடைத்தாள்களுடனான விசேட பொதி


பிரபல புலமைப்பரிசில் ஆசிரியர்களால் தொகுத்து வெளியிடப்படுகிறது
விரைவில் சந்தைக்கு...
0777983308 / 0761393805

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

**2023, ஜூன் 20ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை**

# கவனிக்கப்படவேண்டிய சீனாவின் ஆதிக்கம்!

அமெரிக்காவுக்கு நிகராக வளரத் துடிக்கும் சீனா, உலகின் அனைத்துப் பகுதிகளிலும் தனது தடத்தைப் பதித்து வருகிறது. அரபுலகில் கோலோச்சும் இஸ்லாமிய நாடுகளிலும் அதன் செல்வாக்கு அண்மைக்காலமாகப் பெருகி வருகிறது.

மார்ச் மாதத்தில், சவூதி அரேபியாவின் எண்ணெய் நிறுவனமான சவூதி அரம்கோ சீனாவில் பல பில்லியன் டொலர் முதலீட்டை அதிகரிப்பது மற்றும் சீனாவுக்கு மசகு எண்ணெய் வழங்குவது தொடர்பான இரண்டு முக்கிய ஒப்பந்தங்களை அறிவித்தது. டிசம்பரில், சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங் சீன நாணயமான யுவானில் இரு நாடுகளுக்குமிடையிலான வர்த்தகம் குறித்துப் பேசியிருந்தார்.

உலகின் முன்னணி எண்ணெய் ஏற்றுமதியாளராக சவூதி அரேபியா உள்ளது. மறுபுறம் உலகின் மிகப்பெரிய எரிசக்தி நுகர்வோராக சீனா உள்ளது. இவ்விரு நாடுகளுக்குமிடையேயான இருதரப்பு உறவுகள் ஹைட்ரோகார்பனை அடிப்படையாகக் கொண்டவை. அரசியல் உறவுகள் சூடு பிடித்து வருவதற்கு மத்தியில், பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்பத்துறையில் சவூதி அரேபியாவிற்கும் சீனாவிற்கும் இடையிலான ஒத்துழைப்பும் ஆழமடைந்துள்ளது.

சீனாவின் ஆதிக்கம் இதுவரை பொருளாதாரத்துறையில் உள்ளது. பல நாடுகளுடன் சீனா வர்த்தகம் செய்துவருவதோடு, பல நாடுகளில் முதலீடும் செய்துள்ளது. மிகப் பெரிய பொருளாதாரக் கட்டமைப்பு கொண்ட நாடாகவும் சீனா உருவெடுத்துள்ளது. ஆனாலும், நவீன உலகில் ஒரு பொருளாதார சக்தியாக மட்டுமே வாழ முடியாது என்று சீனா உணரத் தொடங்கியுள்ளது.

அரசியல், இராஜதந்திரம் மற்றும் புவிசார் அரசியலை கலக்காத வரையில், உலக வல்லரசாக மாற முடியாது என்பதை அமெரிக்காவிடமிருந்து அவர்கள் கற்றுக்கொண்ட அதேசமயம், தனக்காக சீனா எடுத்துக்கொள்ளும் அமெரிக்க மொடல் இது என்று புத்திஜீவிகள் சுட்டிக்காட்டுகின்றனர். இஸ்லாமிய நாடுகளை மட்டுமல்ல, தனது அண்டைய நாடுகளையும் கண்வைத்து செயற்பட ஆரம்பித்துள்ளது சீனா.

உதாரணத்துக்கு மியன்மாருக்கு சொந்தமான கொகோ தீவுகளில், தனது கண்காணிப்பு உள்கட்டமைப்பு வசதிகளை சீன இராணுவம் விரிவுபடுத்தி வருகிறது. இதன் வாயிலாக, ஒடிசாவின் பாலசோரில் உள்ள இந்திய ஏவுகணை சோதனை மையம் மற்றும் ஆந்திராவின் விசாகப்பட்டினம் அருகே புதிதாகக் கட்டப்பட்ட ராம்பில்லி கடற்படைத்தளம் உட்பட இந்திய இராணுவத்தின் பல இரகசிய நடவடிக்கைகளை சீனா கண்காணிக்கும் அபாயம் உருவாகியுள்ளதால் சீன இராணுவத்துக்கு அனுமதியளித்த மியன்மாரின் நடவடிக்கைக்கு இந்திய மத்திய அரசு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

தென்கிழக்கு ஆசிய நாடான மியன்மாரில், உள்நாட்டு கலவரம் காரணமாக இராணுவ ஆட்சி அமுலில் உள்ளது. ஜெனரல் மின் ஆங் லெய்ங், நாட்டின் நிர்வாகத் தலைவராக பொறுப்பு வகித்து வருகிறார்.

இவரது ஆட்சியை மேற்கத்திய நாடுகள் கடுமையாக விமர்சித்து வரும் நிலையில், சீனாவின் தயவு மியன்மாருக்கு தவிர்க்க முடியாததாகி உள்ளது. மேலும், மியன்மாருக்கு 32 ஆயிரம் கோடி ரூபாவுக்கு மேல் சீனா நிதி உதவி அளித்துள்ளது.

வங்கக்கடல் மற்றும் இந்திய பெருங்கடல் பகுதிகளில் ஆதிக்கம் செலுத்துவதற்காக, சீனா - மியன்மார் - வங்கதேசத்தை இணைக்கும், பட்டுப்பாதை திட்டத்தில், மியன்மாரை இணைக்கவும் சீனா முனைப்பு காட்டி வருகிறது.

இந்தியாவின் எல்லையில் உள்ள நாடுகளுக்கு ஆதரவு அளிப்பதன் வாயிலாக, அங்கு தங்கள் இராணுவ பலத்தை அதிகரிக்க முயற்சிக்கும் சீனா, மியன்மாரையும் அந்த சதிவலையில் சேர்த்துக் கொண்டு செயற்பட ஆரம்பித்துள்ளது. அந்த வகையிலேயே, வங்கக்கடலில் உள்ள மியன்மாருக்கு சொந்தமான கொகோ தீவுகளில், தங்கள் இராணுவ உட்கட்டமைப்பை சீனா வலுப்படுத்தத் தொடங்கியுள்ளது.

கொகோ தீவுகளில் உள்ள விமான ஓடுதளத்தின் நீளம், 2300 மீற்றர் விஸ்தரிக்கப்பட்டுள்ளமை, செயற்கைக்கோள் புகைப்படம் வாயிலாகத் தெரியவந்துள்ளது. மேலும், இராணுவ வீரர்கள் தங்குவதற்கான கூடாரங்கள் உள்ளிட்ட வசதிகள் செய்யப்பட்டுள்ளதாகவும், தற்போது சீன இராணுவத்தினர் உட்பட, 1500க்கும் மேற்பட்ட வீரர்கள் அங்கு வசிப்பதாகவும் கூறப்படுகிறது.

இலங்கையில் அம்பாந்தோட்டைத் துறைமுகம், கொழும்புத் துறைமுகம், துறைமுக நகரம் என்று முக்கிய கேந்திர நிலையங்களிலும் இதேபோன்றே கால்பதித்து நிற்கின்றது சீனா. பிராந்தியத்தில் எல்லா நாடுகளுக்கும் தங்களின் புவிசார் அரசியல் நோக்கு இருக்கிறது என்றாலும், சீனாவின் இலக்கானது இதர நாடுகளின் பாதுகாப்பைக் கேள்விக்குறியாக்குவதால் அது ஆபத்தானது. சீனாவின் இந்த நகர்வுகள் தொடர்பில் இலங்கையும் மிகுந்த கரிசனை கொள்வது நல்லது.



# வள்ளுவர் விரும்பிய வல்லரசு!

**அருணன் கபிலன்**

உலக அற இலக்கியங்களில் முதலாவதாகப் போற்றப்படுவது திருக்குறள். உலகப் பொதுமறை என்னும் சிறப்புடன் நாடு, இனம், மொழி என்கிற பேதங்களையெல்லாம் கடந்து அறத்தை முதன்மைப்படுத்தி மானுட விழுமியத்தையே குறிக்கோளாகச் சுட்டியது வான்புகழ் வள்ளுவம்.

நூல் வேறு, ஆசிரியர் வேறு என்று பிரித்தறிய இயலா வண்ணம் வள்ளுவரின் உள்ளமே வள்ளுவமாக மலர்ந்திருக்கிறது. உலகு தழுவிய ஒரு முழு வாழ்வியல் வள்ளுவத்திற்குள் பொதிந்திருக்கிறது. தனிமனித ஒழுக்கத்தில் முளைவிடுகிற அறவியல், சூழல், குடும்பம், சமூகம் எனக் கிளைத்து நாடு எனப் பரந்து பின் உலகு தழுவியதாக விரிகிறது.

வட்டத்தின் விட்டம்போல அரசு காப்பாக அமைகிறது என்றால், வட்டத்தின் புள்ளியாக அமைபவன் தனிமனிதன். ஒவ்வொரு வட்டத்துக்கும் ஒவ்வொரு புள்ளி அமைவது போல, ஒவ்வொரு புள்ளிக்கும் ஒரு வட்டமுண்டு. அதாவது தனிமனிதனுக்கும் அரசுக்கும் இருக்கிற பிரிக்க முடியாத நேரடித் தொடர்பைத் திருவள்ளுவர் அவ்வாறு அடிப்படையாக்குகிறார்.

இந்தப் பொருத்தம் அரசனுக்கும் அரசுக்கும் பொருந்தும். திருவள்ளுவரின் காலத்தில் முடியாட்சியே மேலோங்கியிருந்தது. ஆனால், அவர் குடியாட்சியைப் பெரிதும் விரும்பினார். அவர் காலத்தில் குடியாட்சி சாத்தியமில்லை என்று கூற முடியாது. ஆதலால், அவர் நுட்பமான அரசாட்சி முறையை அமைத்தார்.

திருக்குறளின் பல இடங்களில் அவர் 'அரசன்' என்றும் 'அரசு' என்றும் இரண்டு விதமாகக் கூறுவார். அரசனை முதலாகக் கொண்டதே அரசு என்பதில் அவருக்கு மாறுபாடில்லை. ஆனால், அந்த அரசன் கொடுங்கோன்மையாளனாக இருப்பதில் அவருக்கு சம்மதமில்லை. செங்கோன்மையாளனாக இருக்க வேண்டும் என்று அவர் விரும்பினார்.

அரசு என்னும் கட்டமைப்பில் அரசனையும் அமைச்சரையும் குடிமக்களையும் திருவள்ளுவர் படிநிலைகளில் வடிவமைக்கிறார். அரசனைத் தலைவனாக்கியதைப் போலவே அமைச்சர்களை அதிகாரிகளாக்கிக் காட்டினார். இதில் உச்சமானது குடிமக்களை அரசர்களாக்கிக் காட்டுவதுதான். அரசனைத் தொண்டனாகவும் காவலனாகவும் ஆக்கி அமைச்சர்களை அதிகாரிகளாக, சேவகர்களாக ஆக்கி மக்களையே உண்மையான அரசர்கள் ஆக்குவதுதான் வள்ளுவர் விரும்பிய வல்லரசின் நோக்கம்.

'கடையனுக்கும் கடைத்தேற்றம்' என்ற ஜோன் ரஸ்கினுடைய முழக்கத்திற்கு முந்தைய முழக்கம் தமிழில் திருவள்ளுவர் காலத்திலேயே தோன்றியிருக்கிறது. பின்னாளில் பக்தி மரபு இதையே அடியொற்றி எல்லாம் வல்ல கடவுளையே 'அடியார்க்கும் அடியேன்' என்று அடியார்களின் தொண்டனாகப் போற்றிக் கொண்டது. கடவுளே பக்தனாகிய குடிமகனின் அடியவன் என்றால் அரசனின் நிலை குறித்துத் தனித்துக் கூறத் தேவையில்லை.

அறத்துப்பாலில் தனிமனித ஒழுக்கங்களை வலியுறுத்திக் காட்டும் திருவள்ளுவர், அதனோடு இணைத்து இல்லறத்தையும் பெண்மையின் சிறப்பையும் மக்கட்பேற்றின் மாண்பையும் போற்றிக் காட்டுகிறார். இன்பத்துப்பாலில் காதலின் சிறப்பை எடுத்து மொழிகிறார்.

திருவள்ளுவர் அறத்துக்கும் இன்பத்துக்கும் நடுவில் வைத்துத் தருகிற பொருள் என்னும் பொருண்மை நாட்டைக் குறித்ததேயாகும். பொருட்பாலில் அவர் அரசியலையும் அமைச்சியலையும் விரிவாக உணர்த்துகிறார். ஒரு நாடு வள்ளன்மையும் வல்லமையும் கொண்டதாக விளங்க எவ்வாறான வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்பதை அரசியலிலும் அமைச்சியலிலும் வரையறுக்கிறார்.

திருக்குறளில் அதிக இயல்களைக் கொண்டது பொருட்பாலேயாகும். அரசியலுக்கு 25 அதிகாரங்களையும் அமைச்சியலுக்கும் ஏனைய இயல்களுக்கும் அதிகாரங்களை வகுத்து மொத்தம் 70 அதிகாரங்களால் பொருட்பாலை வடிவமைக்கிறார். திருக்குறளின் மையமே நாட்டைக் குறித்ததுதான் என்பதனை இதன்மூலம் ஆழமாக உணர்ந்து கொள்ளலாம்.

அரசையே அவர் இறையாளுகையின் கருணையாகத்தான், இறைமாட்சியாகத்தான் காணுகிறார். அரசியலின் முதல் அதிகாரமே 'இறைமாட்சி' என்று தொடங்குகிறது. அதில் அரசனுக்கான பொதுப்பண்புகளையும் நாட்டுக்கான இயல்புகளையும் குறித்துவிட்டு இறைமாட்சியின் வெளிப்பாடாக விளங்கும் அரசு எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்கு 'மானமுடையது அரசு' என்றும் 'இயற்றல் தொடங்கி ஈட்டல், காத்தல், இவற்றோடு காத்து வகுத்தலும் வல்ல தரசு' என்றும் அரசைக் குறித்துக் காட்டுகிறார்.

அதேவேளையில், அவர் வரையறுக்கும் நல்லரசனின் இயல்புகளை ஒரு மன்னன் கொண்டு விளங்கினால் உலகமே அவனுக்கு வசப்படும் என்றும் அறிவுறுத்துவது ஆழமுடையது. ஆட்சியின் நோக்கம் அதிகாரத்தினால் ஒரு நாட்டைப் பிடிப்பதன்று. அன்பினால் இந்த உலகத்தையே தழுவிக் கொள்வது என்பதுதான் வள்ளுவர் உணர்த்தும் வல்லரசின் அடிப்படை.

அவன் நீதியினால் காத்தால் அந்த நீதியே அவனைக் காக்கும் என்கிறார்.

குற்றங்களைப் பற்றியும் தண்டனைகளைப் பற்றியும் அதிகம் பேசாத நூல் வள்ளுவம் என்பதே அதன் சிறப்பு. ஆனால், அறத்தை நிலை நாட்டுவதற்கு அரசன் முயல்கிற தண்டனை உத்திகளைத் திருவள்ளுவர் ஏற்றுக் கொள்ளவே செய்கிறார். அந்த தண்டனை முறை அவனுக்குரிய தொழில் என்றும், பயிர்களுக்கிடையே மண்டும் களைகளை உழவர்கள் பறிப்பதைப் போன்றது என்று உவமைப்படுத்துவது திருவள்ளுவரின் ஆழ்மனத்தைப் புலப்படுத்துகிறது.

இதேநிலையை திருவள்ளுவர் கொடுங்கோன்மையில் குறிப்பிடுகிறார். நல்ல தலைவனாகிய அரசன் தன் குடிமக்களின் குற்றங்களைத் தண்டிக்காது விட்டால் அந்தக் குற்றவாளிகளே அரச பதவிக்குப் போட்டியிடுவார்கள் (களைகளே பயிராகும்) என்கிறார்.

கொலையாளிகளின் கொலை வெறியினும் கொடியது குடிமக்களைத் துன்புறுத்துபவனின் ஆட்சி. இரவுப் பொழுதில் வேலோடு கொள்ளையிடக் காத்திருக்கும் கொள்ளையனை விடவும் கொடுமையானது கொடுமையான ஒருவனின் ஆட்சி.

வயிற்றுக்குத் தேவையான உணவையும் வாழ்வுக்கு அடையாளமாகிய மானத்தையும் ஒருங்கே இழந்து விடும் கொடுங்கோன்மையாட்சி. அத்தகைய அரசனின் ஆட்சியை அழிப்பதற்குப் பகை நாட்டின் படைகள் தேவையில்லை. அவனது முறைசெய்து காப்பாற்றும் மன்னவனை இறைவனாக்கிப் போற்றச் செய்தவர் திருவள்ளுவர். ஆனால், அதே வேளையில், நாடொறும் நாடி முறை செய்யாமல் அவன் ஏமாற்றும் சமயத்தில் அவனாலேயே நாடொரும் அந்த நாடே கெடும் என்று அவனைக் குட்டவும் தவறவில்லை.

திருவள்ளுவர் பார்வையில் அரசு என்பது வரிவசூலிக்கும் இயந்திரமோ, அதிகாரச் சின்னமோ, தண்டனை வழங்கும் நிறுவனமோ அன்று. மக்களைக் குற்றச் செய்கைகளிலிருந்து மீட்டெடுத்து அறப்பண்புகளில் நம்பிக்கையும் உறுதியும் கொள்ளச் செய்வதே நல்லரசு.

அத்தகைய அரசைத் தோற்றுவிக்கும் மக்களின் தொண்டனாகிய அரசனின் ஆளுமையைச் செங்கோன்மையில் விவரிக்கிறார். அத்தகு பெருமையுடையவனின் ஆட்சி நாடு என்னும் எல்லைக்குள் அடங்கி விடாமல் உலகம் வரையிலும் விரியும் என்று குறிப்பிடுகிறார்.

வேதநூல்களுக்கும் கூட வழிகாட்டியாக விளங்க வேண்டியது அவனுடைய அறமாகிய செங்கோன்மை. அந்தச் செங்கோன்மையின் விளைவாக பருவமழையும் நிறைந்த விளைச்சலும் ஏற்படும் என்று குறிப்பிட்டு நல்ல அரசன் இயற்கையின் தோழனாக இருப்பதையும் அதனால் உலகத்தில் மிக உயர்ந்த தொழிலாகிய உழவுத்தொழில் மேம்படும் என்பதையும் நயமாக உணர்த்திக் காட்டுகிறார்.

ஒரு நாட்டின் நல்ல தலைவனுக்குப் பெருமை தருவது போர்க்களமன்று. நீதிமன்றமே. தன் நாட்டை – உலகத்தை கொடுமை தாங்காமல் மக்கள் சிந்தும் கண்ணீரே அதனைச் செய்து விடும் என்று எச்சரிக்கிறார். மழையில்லா வறட்சியை விடவும் கொடுமையானது அன்பற்ற ஒருவனின் ஆட்சி. இப்படிப்பட்ட ஆட்சியில் ஒருவன் செல்வனாக வாழ்ந்த போதும் அது வறுமையிலும் வறுமையாகவே இருக்கும் என்று தனிமனித வாழ்வுக்கும் அரசாட்சிக்கும் உள்ள தொடர்பினையும் சுட்டிக் காட்டுகிறார்.

கட்டிளங்காளையாகிய இளைஞனை போர்க்களத்துக் குரிய வீரனாகத் தயார் செய்வதே சங்ககால அரசனுக்குரிய பண்பு.

ஆனால், அரசனையே நாட்டின் தந்தையாக்கி தந்தை மகனுக்கும் மகன் தந்தைக்குமாகச் செய்ய வேண்டிய கடமைகளை முன்வைக்கிறார் திருவள்ளுவர்.

மகனைச் சான்றோனாக வளர்ப்பதைத் தந்தையின் கடமையாகவும் இவனைச் சான்றோனாக அடைய அந்தத் தந்தை என்ன தவம் செய்தானோ என்று வடிவமைப்பது அறவியல் அரசியல் அமைப்புடைய தனிமனித, குடும்ப, சமூக, அரச மரபையே திருவள்ளுவர் முதன்மைப்படுத்துவதைக் காட்டுகிறது.

பொதுவுடைமைக் கருத்தின் மூலங்கள் பல திருக்குறளில் காணப்படுகின்றன என்று உணர்த்தும் குன்றக்குடி அடிகளார், திருக்குறள் அதன் பொருளடைவுக்கு ஏற்றவாறு தமிழ்நாட்டில் கடந்த காலங்களில் சமுதாய மாற்றத்தைத் தோற்றுவிக்காதது ஏன்? பிரெஞ்சு எழுத்தாளர்கள் வால்டேர், ரூசோ போன்றவர்களின் படைப்புகளில் பிரெஞ்சுப் புரட்சியும், மார்க்ஸ், லெனின் ஆகியோர் எழுத்தாற்றலால் சோவியத் புரட்சியும் எழுந்ததைப் போன்று தமிழகத்தில் திருக்குறளைத் தொடர்ந்து சமுதாய மாற்றம் நிகழாதது ஏன் என்று ஒரு வினாவை எழுப்புகிறார்.

அவ்வினாவுக்கு விடையாக அவரே, ''திருக்குறள் அப்பட்டமான இலக்கியமாகக் கருதப் பெற்றுப் பதவுரை, பொழிப்புரை காணும் நிலையில் மட்டுமே பயன்படுத்தப் பெற்றது. அதை ஒரு வாழ்வியலாகப் பார்க்கும் பார்வை யாருக்கும் வரவில்லை'' என்கிறார்.

வள்ளுவர் விரும்பிய வல்லரசு தனிநாட்டுக்கு மட்டுமன்று, உலகத்துக்கே வழிகாட்டியாக அமையும் - அமைய வேண்டும்.

*(நன்றி - தினமணி)*

## இன்றைய நாளில்...

- 1837 – விக்டோரியா, பிரித்தானியாவின் பேரரசியானார்.
- 1840 – சாமுவெல் மோர்ஸ், தந்திக்கான காப்புரிமத்தைப் பெற்றார்.
- 1877 – அலெக்சாண்டர் கிரகாம் பெல், உலகின் முதலாவது வர்த்தக முறைத் தொலைபேசி சேவையை கனடாவின் ஹாமில்டனில் ஆரம்பித்தார்.
- 1944 – சோதனை ஏவுகணையான எம்.டபிள்யூ-18014 (வி-2) 176 கி.மீ. உயரத்தை அடைந்து வெளியுலகிற்குச் சென்ற முதலாவது மனிதனால் செய்யப்பட்ட பொருள் என்ற சாதனையைப் படைத்தது.
- 1955 – 11ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் மிக நீண்ட கதிரவ மறைப்பு இலங்கை உட்பட பல நாடுகளில் அவதானிக்கப்பட்டது. மொத்தம் 7 நிமிடங்கள் 7.74 வினாடிகளுக்கு இது நீடித்தது.
- 1960 – மாலி கூட்டமைப்பு பிரான்ஸிடமிருந்து விடுதலை பெற்றது. இது பின்னர் மாலி, செனிகல் என இரு நாடுகளாகப் பிரிந்தது.
- 1990 – கல்முனைப் படுகொலைகள்: இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் கல்முனையில் இலங்கைப் படைத்துறையினரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 250 தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.
- 1990 – '5261-யுரேக்கா' என்ற சிறுகோள் கண்டுபிடிக்கப்பட்டது.

## நக்கல் நமசிவாயம்

தேர்தல் நடத்த நிதி வேண்டுமென்று தேர்தல் ஆணைக்குழு திரும்பவும் கோரிக்கை விடுத்திருக்குது... தாங்களும் இருக்கிறம் எண்டு காட்டுறாங்கள் போல..!



# கொங்கிரீட் தூண் இடிந்து விழுந்து சிறுமி உயிரிழப்பு

## தந்தை வைத்தியசாலையில் அனுமதி




கொங்கிரீட் தூண் இடிந்து விழுந்து சிறுமியொருவர் உயிரிழந்துள்ளதுடன் தந்தை காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தங்காலை பொலிஸார் தெரிவித்தனர்.

தங்காலை, நெடோல்பிட்டிய பிரதேசத்தில் நேற்றுக்காலை இத்துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சிறுமி தனது தந்தையுடன் வீட்டில் உள்ள கொங்கிரீட் கம்பத்தில் ஊஞ்சல் ஆடிக் கொண்டிருந்த போதே இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இச்சம்பவத்தில் தந்தை படுகாயமடைந்த நிலையில் தங்காலை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மாத்தறை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் நெவிந்தி யஹாரா தேவ்மினி ( 9 வயது) என்ற சிறுமியே பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். ஐந்து பிள்ளைகளைக் கொண்ட குடும்பத்தில் இவர் இளைய பிள்ளையாவார். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தங்காலை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன நாட்டை சீரழிக்கும் பாதையில் பயணிக்கமாட்டாது

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன நாட்டுக்கு விரோதமான அழிவுகரமான பயணத்தை மேற்கொள்ளாது. நாட்டின் வளர்ச்சியைத் தவிர வேறு எந்த நிகழ்ச்சி நிரலும் தனது கட்சிக்கு இல்லை என்று அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

உடுகம்பல ரெஜி ரணதுங்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் 17ஆம் திகதி இடம்பெற்ற கம்பஹா மாவட்ட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வழிநடத்தல் குழுவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் கூறியதாவது,

எதிர்க்கட்சிகள் தேர்தலுக்காக முழக்கமிடு கின்றன. தேர்தல் நடக்காவிட்டால் கொழும்பு முற்றுகையிடப்படும் என்கிறார்கள். வெகு சிலரே அதற்கு வந்திருப்பதை தொலைக்காட்சியில் பார்த்தேன். அவர்கள் வேடிக்கைக்காகச் செய்யும் காரியம் என்று நான் நினைக்கிறேன். மூன்று சதவீதமான சகோதரர்கள்தான் தேர்தலுக்காக அதிகம் சத்தம் போடுகிறார்கள். அவர்களின் வரலாற்றைப் பாருங்கள். ஜே.வி.பி.யின் வரலாற்றில் அதிகம் செய்த காரியம் தேர்தலைத் தவிர்த்ததுதான். ஜனாதிபதியை தெரிவு செய்வதற்காக பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதாக சஜித் கடைசி நிமிடத்தில் அறிவித்தார்.

இந்த இருவருக்குமே அடிமட்ட அரசியல் கூடத் தெரியவில்லை. கூட்டத்தைக் கண்டவுடன் இருவரும் குதூகலமடைந்தனர். நடைமுறை அரசியல் என்பது ஊடகங்களுக்கு முன்னால் ஒரு நிகழ்ச்சியை நடத்துவது போல் எளிமையானது அல்ல.

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணும் முயற்சியில் அரசு இறங்கியுள்ளது. இப்படியான நேரத்தில் தேர்தலுக்குச் சென்றால் பிரச்சினைகள் இன்னும் மோசமாகும். இந்த உண்மையைப் புரிந்துகொள்ள முடியாதவர்கள் ஆட்சியைப் பிடித்து நாட்டைக் கட்டியெழுப்புவார்கள் என்று நம்ப முடியுமா? வெளிநாடுகளில் உள்ள எதிர்க்கட்சிகள் நெருக்கடியை தீர்க்க அந்நாடுகளின் அரசாங்கங்களுக்கு உதவுகிறது. ஆனால் நம்நாட்டில் எதிர்க்கட்சிகள் பொய்ப் பிரசாரங்களை தோற்றுவித்து அரசாங்கத்தின் முன்னேற்றத்தைத் தடுக்கின்றன.

நாங்கள் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை மிகவும் கடின உழைப்புடன் கட்டியெழுப்பினோம். சவால்களுக்கு பயந்து நாங்கள் ஓடுவதில்லை. எங்கள் வீடுகளுக்கு தீ வைக்கப்பட்டன. எவ்வளவோ துன்புறுத்தல்கள் வந்தாலும் நாங்களும் எங்கள் கட்சிக்காரர்களும் இன்னும் மொட்டிலேயே இருக்கிறோம். தேர்தல் வந்தால் மீண்டும் நாங்கள்தான் ஆட்சி அமைப்போம்.

சமீப காலமாக நாங்கள் சற்று அமைதியாக இருந்தோம். மொட்டு வாடிவிட்டதாக எதிர்க்கட்சியினர் நினைத்தனர். அது அவர்களின் தவறு. அப்போது கட்சி என்ற ரீதியில் எங்களின் தவறுகளையும் குறைகளையும் சுயவிமர்சனம் செய்தோம். திறமையான மாலுமிகள் புயல் மிகுந்த கடலில் பயணிக்கிறார்கள், அமைதியான கடலில் அல்ல.இப்போது நாம் முன்னரை விட பலமான சக்தியாக இருக்கிறோம்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தேர்தலுக்கு பயந்து ஓடாது. எந்த நேரத்திலும் தேர்தலை சந்திக்க எங்கள் கட்சி தயாராகவுள்ளது.

நாம் பிறந்த நாடுதான் எங்களுக்கு முதன்மையானது. நாட்டை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சி நிரலைத் தவிர வேறு எந்த நிகழ்ச்சி நிரலும் எங்களிடம் இல்லை. மஹிந்த ராஜபக்ஷ சவால்களை முறியடித்த தலைவர். அத்தகைய தலைவரின் நிழலில் உருவான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன இந்த நாட்டை அழிக்கும் பாதையில் ஒருபோதும் செல்லாது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வேலைத்திட்டத்துக்கு நாம் அதிகபட்ச ஆதரவை வழங்குகிறோம். எங்களுக்கும் அவருக்கும் இடையே எந்த பிரச்சினையும் இல்லை. ஜனாதிபதியுடன் இணைந்து நாட்டை விற்பதாக எதிர்க்கட்சியினர் பொய்ப் பிரசாரங்களை உருவாக்கி வருகின்றனர். எனவே, எதிர்க்கட்சிகளின் பொய்ப்பிரசாரங்களுக்கு மக்கள் ஏமாந்து விட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

இந்நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த, , பாராளுமன்ற உறுப்பினர்களான உபுல் மகேந்திர ராஜபக்ஷ, மிலான் ஜயதிலக்க, மேல் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் லக்ஷ்மன் குணவர்தன உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# இராஜாங்க அமைச்சர் வீட்டின் மீது தாக்குதல்

## விசாரணை ஆரம்பம்

இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீரவின் களனியில் உள்ள வீட்டின் மீது 18ஆம் திகதி இரவு இனந்தெரியாதோர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

களனி சரத்சந்திர டயஸ் மாவத்தையில் அமைந்துள்ள சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீரவின் வீட்டின் மீதே 18 ஆம் திகதி இரவு 10.50 மணியளவில் இனந்தெரியாத குழுவொன்றினால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இச்சம்பவத்தில் வீட்டின் கதவுகள் மற்றும் ஜன்னல்கள் என்பன சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதல் சம்பவத்தின் போது, ஊழியர் ஒருவரே வீட்டில் இருந்துள்ளார்.

இந்நிலையில் இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர நேற்று (19) காலை அந்த வீட்டுக்குச் சென்று பார்வையிட்டுள்ளார்.

தாக்குதல் சம்பவம் தொடர்பில் சபுகஸ்கந்த பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# பிரித்தானியாவுக்கான தூதுவராக ரோஹித்த



பிரித்தானியாவுக்கான புதிய இலங்கைத் தூதுவராக முன்னாள் அமைச்சர் ரோஹித்த போகொல்லாகமவை நியமிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அவர் விரைவில் கடமைகளை பொறுப் பேற்பாரென எதிர்பார்க்கப்படுகிறது.

# பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் புதிய தலைவர் பதவிக்கான பிரேரணை

## அரசியலமைப்பு சபைக்கு சமர்ப்பித்தார் ஜனாதிபதி

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் புதிய தலைவர் பதவிக்கான பிரேரணையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசியலமைப்பு சபைக்கு சமர்ப்பித்துள்ளார்.

பேராதனை பல்கலைக்கழக பேராசிரியர் ஒருவர் இதனை பரிந்துரைத்துள்ளதாக கூறப்படுகிறது.இந்த பெயர் முன்மொழிவு குறித்து அரசியல் நிர்ணய சபை எதிர்வரும் 26ஆம் திகதி கூடி முடிவெடுக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க அண்மையில் அந்தப் பதவியிலிருந்து நீக்கப்பட்டார்.

அண்மையில் ஜனக ரத்நாயக்கவுக்கும் மின்வலு எரிசக்தி அமைச்சருக்கும் இடையில் கருத்து மோதல் ஏற்பட்டது.

அதன் பின்னர், நிதியமைச்சர் ரத்நாயக்கவை அப்பதவியிலிருந்து நீக்குவதற்கான பிரேரணையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

ஜனக ரத்நாயக்கவுக்கு எதிரான தீர்மானம் மே 24ஆம் திகதி பாராளுமன்றத்தில் 46 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# அம்பாறை, திருமலை மாவட்டங்களுக்கான அபிவிருத்திக் குழுவின் இணைத் தலைவராக அதாஉல்லா நியமனம்



அம்பாறை மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களுக்கான அபிவிருத்திக் குழுவின் இணைத் தலைவராக முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம். அதாஉல்லா நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனம், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் கடந்த 13ஆம் திகதி வழங்கப்பட்டுள்ளது. அம்பாறை மாவட்ட அபிருத்திக் குழுவின் இணைத் தலைவராக கடந்த 2015ஆம் ஆண்டு வரை முன்னாள் அமைச்சர் அதாஉல்லா செயற்பட்டார்.

எனினும், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சியில் இவர் தொடர்ச்சியாக புறக்கணிக்கப்பட்டு வந்தார்.

இந்த நிலையில், அம்பாறை மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் விமலவீர திசாநாயக்கவுக்கும் இவருக்கும் இடையில் தொடர்ச்சியாக முறுகல் ஏற்பட்டுவந்தது.

இவ்வாறான நிலையிலேயே பாராளுமன்ற உறுப்பினர் அதாஉல்லா தற்போது அம்பாறை மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களுக்கான அபிவிருத்திக் குழுவின் இணைத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, பாராளுமன்றத்தில் கட்சித் தலைவர் என்ற அந்தஸ்தும் தற்போது முன்னாள் அமைச்சர் அதாஉல்லாவுக்கு கிடைக்கப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கோதுமை மாவின் விலையை அதிகரிக்க சபையின் அனுமதியைப் பெற வேண்டும்

## வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவிப்பு

உள்நாட்டு கோதுமை மா நிறுவனங்கள் எதிர்காலத்தில் கோதுமை மாவின் விலையை அதிகரிக்குமாயின் நுகர்வோர் விவகார அதிகார சபையின் அனுமதியைப் பெற வேண்டும் என வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நேற்று முன்தினம் (18)நடத்தியபோதே அமைச்சர மேற்கண்டவாற தெரிவித்தார்.

பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலைகளை 10 ரூபாவினால் விரைவில் குறைக்க வேண்டும்.எவ்வாறாயினும், பேக்கரிப் பொருட்களுக்கு தேவையான ஏனைய பொருட்களின் விலை குறையாத காரணத்தினால் தமது உற்பத்திகளின் விலைகளை குறைப்பது சிக்கலாக உள்ளதாக அகில இலங்கை பேக்கரிகள் சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்தன இதன்போது சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, கோதுமை மா பொருட்களின் விலைகளுக்கும் கட்டுப்பாட்டு விலை தேவை என உணவக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.

# நட்டத்தில் இயங்கும் டிப்போக்கள் மூடப்படும்

## அபாயம் ஏற்பட்டுள்ளதாக சபையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவிப்பு

போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான 107 டிப்போக்களில் 40 டிப்போக்கள் தற்போது தொடர்ந்தும் நஷ்டத்தில் இயங்குவதாகவும் அவற்றுள் பெரும்பாலான டிப்போக்கள் கிராமப்புறங்களில் இருப்பதாகவும் அந்த அதிகாரி மேலும் குறிப்பிட்டார்.

நஷ்டத்தில் இயங்கும் டிப்போக்களை மூடுவதற்கு முன் நஷ்டமடையாமல் இருக்க பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் நடவடிக்கை தோல்வியடைந்தால் மூட வேண்டிய நிலை ஏற்படும் என்றும் அவ் அதிகாரி மேலும் தெரிவித்தார்.

## களுத்துறை மாவட்டத்தில் விளையாட்டுப் போட்டிகள்

*(பேருவளை நிருபர்)*

புனித ஹஜ்ஜுப் பெருநாளை முன்னிட்டு களுத்துறை மாவட்டத்தில் உள்ள முஸ்லிம் கிராமங்களில் பல்வேறு விளையாட்டு போட்டிகள் இடம்பெறவுள்ளன.

இதற்கிணங்க பேருவளை, களுத்துறை, பாணந்துறை, பண்டாரகம, வெலிப்பன்னை, பலாந்தை, வியங்கல்லை மற்றும் தர்கா நகர் ஆகிய பகுதிகளில் உதைபந்தாட்டம், கிரிகெட் உட்பட பல்வேறு போட்டிகள் இம்முறை இடம்பெறவுள்ளன.

பாடசாலை மற்றும் பாலர் பாடசாலை மாணவர்களுக்கும் விஷேட விளையாட்டு போட்டிகள் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளன.

இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையிலும் பல்வேறு நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளமை விஷேட அம்சமாகும்.

## ஹெரோயின் வைத்திருந்த மூவர் கைது

மொனராகலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது தன்வசம் ஹெரோயின் போதைப்பொருளை வைத்திருந்த மூவர் கைது செய்யப்பட்டதாக மேற்படி பிரிவு தெரிவித்தது.

மாரவ, பன்சல்வத்தை மற்றும் வெலேவத்தை பிரதேசங்களில் வைத்தே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

25 – 35 வயதுகளுக்கு இடைப்பட்ட மேற்படி சந்தேக நபர்களிடமிருந்து 180,234 மற்றும் 378 மில்லிகிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டள்ளது. மொனராகலை பொலிஸார் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# கல்வியே முஸ்லிம்களின் மூலதனமாகும்

## ரூமி ஹாஷிம் கல்வி நிலையத்தின் ஸ்தாபகத் தலைவர்






(பேருவளை நிருபர்)

முஸ்லிம் சமூகத்தின் இன்றைய மூலதனமாக கல்வி திகழ்கிறது. ஒருங்கிணைந்த திட்டமிடலே சமூகத்தின் கல்வி அபிவிருத்திக்கு வழிவகுக்கும் என ரூமி ஹாஷிம் கல்வி நிலையத்தின் ஸ்தாபகத் தலைவர் கலாநிதி ரூமி ஹாஷிம் தெரிவித்தார்.

ரூமி ஹாஷிம் கல்வி நிலையத்தின் ஸ்தாபகத் தலைவரின் பூரண அனுசரணையுடன் தர்கா நகரில் இயங்கி வரும் தர்கா நகர் விஞ்ஞானப் பிரிவுக்கு புதிய மாணவர்களை இணைத்துக் கொள்வது தொடர்பான கூட்டம் மேற்படி கல்வி நிலையத்தில் இடம்பெற்றது. அதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.மேற்படி விஞ்ஞானப் பிரிவுக்கு புதிதாக 150 மாணவ, மாணவிகள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதோடு வெளிமாவட்டங்களைச் சேர்ந்த மாணவ, மாணவிகளுக்கு இலவசமான தங்குமிட வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

கல்வி நிலையத்தின் செயலாளர் ஜெசீல் அஹம்மத்தின் மேற்பார்வையின் கீழ் இந்த விஞ்ஞானக் கல்விப் பிரிவு பல வருடங்களாக இயங்கி வருவதோடு விஞ்ஞானத் துறையில் தலை சிறந்த புத்தி ஜீவிகளையும் உருவாக்கியுள்ளது.

அவர் மேலும் உரையாற்றுகையில், முஸ்லிம் சமூகத்தின் இன்றைய மூலதனமாக கல்வி திகழ்கிறது. ஒருங்கிணைந்த திட்டமிடலே சமூகத்தின் கல்வி அபிவிருத்திக்கு வழிவகுக்கும்.

முஸ்லிம் சமூகத்திலிருந்து கூடுதலான மாணவர்கள் வைத்திய பிரிவுக்குத் தெரிவாக வேண்டும். அந்த உயர் நோக்கத்துடனேயே எமது கல்வி நிலையத்தின் ஊடாக விஞ்ஞானப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கூலித் தொழிலில் ஈடுபடும் தொழிலாளியின் பிள்ளை கூலித் தொழிலாளியாக அல்லாது கல்விமான்களாக உருவாக வேண்டும். நாட்டில் முஸ்லிம்கள் செறிந்து வாழும் பகுதிகளில் இது போன்ற விஞ்ஞானக் கல்விப் பிரிவுகள் உருவாக்கப்பட வேண்டும். இதற்காக வசதி படைத்த பரோபகாரிகள் தாராளமாக முன்வந்து உதவி செய்ய வேண்டும்.

தர்கா நகர் விஞ்ஞானக் கல்விப் பிரிவில் கல்வி பயிலும் மாணவர்கள் அதிர்ஷ்டசாலிகளாவர். இப்பகுதி மாணவர்ககள் தூர இடங்களுக்குச் செல்லாது நமது காலடியில் கல்வி கற்பதற்கான வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன் வெற்றிக்காக அனைவரினதும் ஒத்துழைப்பை யும் எதிர்பார்க்கின்றேன் என்றார்.

இக்கூட்டத்தில் தர்கா நகர் அல்ஹம்ரா மகா வித்தியாலய முன்னாள் அதிபர் எம்.இஸட்.எம் நயீம், மேற்படி கல்வி நிலைய இணைப்பாளர் ரபீஸ் ஹம்ஸா உட்பட பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

## சீனன் கோட்டையிலிருந்து 230 பேர் மக்கா பயணம்

(பேருவளை நிருபர்)

பேருவளை, சீனன் கோட்டையிலிருந்து இம்முறை ஆகக் கூடுதலானோர் புனித ஹஜ் கடமையை நிறைவேற்ற மக்காவுக்கு செல்லவுள்ளனர்.

சுமார் 230 பேர் இம்முறை ஹஜ் கடமையை மேற்கொள்ள செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது. சீனன் கோட்டையின் வரலாற்றில் ஆகக் கூடுதலானோர் புனித ஹஜ் கடமைக்குச் செல்வது இதுவே முதல் தடவையாகும்.

புனித ஹஜ் கடமையை மேற்கொள்ளவுள்ள யாத்திரிகர்களுடனான முஸாபஹா நிகழ்வு சீனன் கோட்டை பாஸிய்யா பெரிய பள்ளிவாசலில் இடம்பெற்றது. சீனன் கோட்டை பள்ளிச்சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வில் பெருமளவானோர் கலந்துகொண்டனர்.

பேருவளை, களுத்துறை, பாணந்துறை, பண்டாரகம, வியங்கல்லை, பலாந்தை மற்றும் வெலிப்பன்னை ஆகிய பகுதிகளில் இருந்தும் இம்முறை கூடுதலானோர் ஹஜ் கடமையை நிறைவேற்ற மக்கா செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
ஞாயிற்றுக்கிழமை 2023.06.18
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5149
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 17,705,561.00
ஆங்கில எழுத்து L
வெற்றி இலக்கங்கள் 1 8 3 8 8 9

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3391
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 64,201,658.00
ஆங்கில எழுத்து W
வெற்றி இலக்கங்கள் 30 34 59 75

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1604
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.12,650,882.32
வெற்றி இலக்கினம் கும்பம்
வெற்றி இலக்கங்கள் 1 7 2 9 1 8

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் 1179
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 95,452,035.20
ஆங்கில எழுத்து R
வெற்றி இலக்கங்கள் 02 15 17 80

ராசிசுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் 458
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.2,709,471.40
வெற்றி இலக்கினம் விருச்சிகம்
வெற்றி இலக்கங்கள் 27 28 48 49
விசேட இலக்கினம் விருச்சிகம்

Mega POWER
சீட்டிழுப்பு இலக்கம் 1497
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 330,528,418.00
ஆங்கில எழுத்து V
சுப்பர் இலக்கம் 25
வெற்றி இலக்கங்கள் 07 13 71 78
ரூ. 10,000,000.00
ரூ. 10,000,000.00

# வலி. வடக்கு காணிகளை விடுவிப்பதற்கான அளவீட்டுப் பணிகள் ஆரம்பம்





வலி. வடக்கில் மக்களின் காணிகளை விடுவிப்பதற்கான அளவீட்டுப் பணிகள் மயிலிட்டி பேச்சி அம்மன் ஆலயப் பிரதேசத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பிரசன்னத்துடன் நேற்று (19) ஆரம்பமாகியுள்ளன.

இங்கு கருத்து தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,

"இலங்கை - இந்திய ஒப்பந்தத்திற்கு பிற்பட்ட காலத்தில் முன்னெடுக்கப்பட்ட அழிவு, யுத்தம் காரணமாக இராணுவத் தேவைகளுக்காக அரசாங்கத்தால் சுவீகரிக்கப்பட்டன. இக்காணிகளை விடுவித்து காணி உரிமையாளர்களிடம் கையளிப்பதற்கு பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2013ஆம் ஆண்டு காலப் பகுதியில் இராணுவத்தினரின் பயன்பாட்டுக்காக அரசுடமையாக்கும் நோக்கில் வெளியிடப்பட்ட வர்த்தமானியின் அடிப்படையில் அரச காணிகளாக சுவீகரிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்ட சுமார் 6,300 ஏக்கர் காணிகளில் கணிசமானவை தற்போது விடுவிக்கப்பட்டு காணி உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

எனினும், குறித்த காணிகள் சட்ட ரீதியாக இப்போதும் அரச காணிகளாகவே காணப்படுகின்றமையினால் 2013 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட வர்த்தமானியை மீளப் பெறுகின்ற வகையில் புதிய வர்த்தமானி வெளியிடவேண்டியிருக்கின்றது.

இதுதொடர்பாக அண்மையில் ஜனாதிபதி செயலகத்தில் விரிவாகக் கலந்துரையாடிய நிலையில், குறித்த 2013 வர்த்தமானியை மீளப்பெறுவதற்கும் தற்போது விடுவிக்கப்படாமல் இருக்கின்ற சுமார் 2,900 ஏக்கர் காணிகளில் முடிந்தளவு காணிகளை விடுவிப்பதற்கும் காணி அளவீடுகளை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது" – என்றார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியில், ஜனாதிபதி செயற்குழாம் பிரதானி சாகல ரத்நாயக்கா தலைமையில் இடம்பெற்ற குறித்த கூட்டத்தின் தீர்மானப்படி நேற்று அளவீட்டுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஜனாதிபதி சட்டத்தரணி சாந்தா அபிமன்னசிங்கம் காலமானார்



(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவி, ஜனாதிபதி சட்டத்தரணி சாந்தா அபிமன்னசிங்கம் (வயது -77) காலமானார்.

யாழ்ப்பாணம் சட்டத்தரணிகள் சங்கத்தின் நீண்டகாலத் தலைவியாக இருந்த அவர், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நீதிமன்றங்களின் மேம்படுத்தல்களிலும் சட்டத்தரணிகளின் நலன்களிலும் அக்கறையுடன் செயற்பட்டார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் மற்றும் இறுதி அஞ்சலி நிகழ்வு நேற்று முற்பகல் 11 மணியளவில் அவரது உடுவில் இல்லத்தில் இடம்பெற்றன.

# மட்டுவில் மோகனதாஸ் சனசமூக நிலையத்தின் 75ஆவது ஆண்டு விழா





(சாவகச்சேரி நிருபர்)

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மட்டுவில் கிழக்கு மோகனதாஸ் சனசமூக நிலையத்தின் 75ஆவது ஆண்டு விழா நிகழ்வுகள் நேற்று முன்தினம்(18)ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் மோகனதாஸ் விளையாட்டு மைதானத்தில் கோலாகலமாக இடம்பெற்றன.

மோகனதாஸ் சனசமூக நிலையத் தலைவர் சு.சுதாகரன் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் க.மகேசன் கலந்து சிறப்பித்திருந்தார்.

மேலும் சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சிப் பிரதேச செயலாளர் திருமதி உஷா சுபலிங்கம் மற்றும் சாவகச்சேரி மேலதிக சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் க.சிவசுதன் ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக ஆயுர்வேத வைத்தியர் திருமதி வி.புஷ்பராணி, சந்திரபுரம் கிராம அலுவலர் பா.சுபாஷன், மட்டுவில் கிழக்கு கிராம அலுவலர் செல்வி நா.தர்மினி, மட்டுவில் வடக்கு கிராம உத்தியோகத்தர் திருமதி ம.சோபிகா மற்றும் சாவகச்சேரி பிரதேசசபைச் செயலாளர் ஆகியோரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

சிறப்பு நிகழ்வுகளாக கிராமத்தின் மூத்தோர்கள் கௌரவிப்பு, ஆண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் மற்றும் கலை நிகழ்வுகள் இடம்பெற்றிருந்தன.

# சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி

(சாவகச்சேரி நிருபர்)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட 11 வட்டாரங்களிலும் நேற்று (19) திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் ஜூலை மாதம் 04ஆம் திகதிவரையான 14 தினங்கள் வளர்ப்பு நாய்களுக்கான தடுப்பூசி ஏற்றப்படும் என சுகாதாரப் பகுதியினர் அறியத்தந்துள்ளனர்.

அந்தவகையில் 19/06 திங்கட்கிழமை மீசாலை மேற்கு வட்டாரத்திலும்,

20/06 செவ்வாய்க்கிழமை மீசாலை மேற்கு மற்றும் மீசாலை கிழக்கு வட்டாரங்களிலும்,

21/06 புதன்கிழமை மீசாலை கிழக்கு வட்டாரத்திலும்,

22/06 வியாழக்கிழமை மண்டுவில் வட்டாரத்திலும், 23/06 வெள்ளிக்கிழமை சாவகச்சேரி வடக்கு வட்டாரத்திலும், 24/06 சனிக்கிழமை சாவகச்சேரி நகர வட்டாரத்திலும், 26/06 திங்கட்கிழமை சங்கத்தானை வட்டாரத்திலும், 27/06 செவ்வாய்க்கிழமை கோவிற்குடியிருப்பு வட்டாரத்திலும்,

28/06 புதன்கிழமை மற்றும் 29/06 வியாழன் ஆகிய இரு தினங்களில் கல்வயல் வட்டாரத்திலும், 30/06 வெள்ளிக்கிழமை நுணாவில் கிழக்கு வட்டாரத்திலும், 01/07 சனிக்கிழமை நுணாவில் மத்தி வட்டாரத்திலும், 03/07 திங்கட்கிழமை மற்றும் 04/07 செவ்வாய்க்கிழமை ஆகிய இரு தினங்கள் நுணாவில் மேற்கு வட்டாரத்திலும் நாய்களுக்கான தடுப்பூசி ஏற்றப்படவிருப்பதாக அறிவித்துள்ளனர். இது தொடர்பான மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள 0771210649 எனும் தொலைபேசி இலக்கத்தை தொடர்புகொள்ள முடியுமெனவும் தெரிவித்துள்ளனர்.

# முதலுதவிச் சங்க தொண்டர் சபையின் சேவையைப் பாராட்டி சான்றிதழ் வழங்கிவைப்பு



(சாவகச்சேரி நிருபர்)

இலங்கை முதலுதவிச் சங்க இந்து சமய தொண்டர் சபையினரின் சேவையைப் பாராட்டி தென்மராட்சி-வரணி சிட்டிவேரம் கண்ணகி அம்மன் ஆலய நிர்வாகத்தினரால் நேற்று முன்தினம் (18) சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

சிட்டிவேரம் கண்ணகி அம்மன் ஆலய தேர்த் திருவிழாவில் இந்து சமய தொண்டர் சபைத் தொண்டர்கள் சேவையாற்றியிருந்த நிலையில்,அவர்களின் சேவையைப் பாராட்டி சான்றிதழ்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்வில் ஆலய நிர்வாகத்தினர் மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் கலந்துகொண்டனர்.

# 195 நாடுகளின் தலைநகரங்களின் பெயர்களை 4 நிமிடங்களில் கூறி 5 வயது சிறுவன் உலக சாதனை

## சிறுவனைப் பாராட்டி நுவரெலியாவில் வாகனப் பேரணி

(செ.திவாகரன்)

உலக நாடுகளில் உள்ள 195 நாடுகளின் தலைநகரங்களை 04 நிமிடங்களில் கூறி நுவரெலியா, பீற்று தோட்ட லவர் ஸ்லிப் பிரிவில் விநாயகபுரம் பகுதியைச் சேர்ந்த ஹர்சித் என்ற 5 வயதுச் சிறுவன் உலக சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

சிறுவனைப் பாராட்டும் வகையில் நுவரெலியா பிரதான நகரில் மாபெரும் வாகனப்பேரணியொன்று ஞாயிற்றுக்கிழமை (18) முன்னெடுக்கப்பட்டது.

விநாயகபுரம் பகுதியைச் சேர்ந்த கலாநேசன் மற்றும் லலிதாம்பிகை ஆகியோரின் மகனான 5 வயதுடைய ஹர்சித் என்ற சிறுவன் உலக வரைபடத்திலுள்ள 195 நாடுகளின் அமைவிடங்களை அடையாளம் காட்டியவாறு அவற்றின் பெயர்களையும் அவற்றின் தலைநகரங்களையும் 4 நிமிடங்கள் 16 நொடிகளுக்குள் கூறி 'புதிய சோழன்' உலக சாதனையைப் படைத்துள்ளான்.




சிறுவனின் ஞாபகத் திறனைப் பாராட்டி பன்னாட்டுச் சோழன் உலக சாதனை புத்தக நிறுவனம், சிறுவனின் முயற்சியை முறைப்படி நேரடியாகப் பரிசோதித்து உலக சாதனையாக அங்கீகாரம் வழங்கியது.

உலகசாதனை படைத்த சிறுவனின் வெற்றியைக் கொண்டாடும் நோக்கில் நேற்றுமுன்தினம் வாகனப்பேரணி முன்னெடுக்கப்பட்டது.

இவ்வாகனப் பேரணி நுவரெலியா - உடபுசல்லா பிரதான வீதியில் ஆரம்பித்து நுவரெலியா பிரதான நகர வீதி வழியாக குயின் எலிசபெத், கண்டி பிரதான வீதி, பழையகடை வீதியூடாகச் சென்று மீண்டும் பிரதான வீதிக்குச் சென்று நிறைவுபெற்றது.

# ஓடும் பஸ்ஸுக்குள் தங்கச்சங்கிலி திருட்டு: சூத்திரதாரி உட்பட உதவிய இருவரும் கைது

(கண்டி நிருபர்)

கண்டி, அம்பிட்டிய பஸ்ஸில் தங்கச் சங்கிலி ஒன்றைக் களவாடிய மூன்று இளம் பெண்களை கண்டிப் பொலிஸார் நேற்றுமுன்தினம் (18) கைது செய்துள்ளனர்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:-

கண்டி நகரிலிருந்து அம்பிட்டிய நோக்கிச் சென்ற பஸ்ஸில் சுமார் இரண்டு கிலோ மீற்றர் தூரம் பயணிக்கும்போது கண்டி வாவிக்கரையை அடுத்துள்ள ரத்துபோக்குவ என்ற பிரதேசத்தில் வைத்து பெண்ணொருவர் தனது கழுத்திலிருந்த தங்கச் சங்கிலி காணாமற்போயுள்ளதாக சக பயணிகளுக்குத் தெரிவித்துள்ளார்.

பயணத்தை ஆரம்பித்து சிறிது நேரத்தில் இச்சம்பவம் நடந்துள்ளதால் திருடியவர்கள் தப்பிச்செல்ல கால அவகாசம் இல்லை என்பதை உணர்ந்ததால், பயணிகள் எவரையும் பஸ்ஸிலிருந்து இறங்க அனுமதிக்காது பொலிஸாருக்கு தெரியப்படுத்தியுள்ளனர்.

அங்கு விரைந்த பொலிஸார் சந்தேகத்திற்கிடமான சிலரை பரிசோதித்துள்ளனர்.

அப்போது இளம் யுவதியொருவர் தனது உள்ளாடைக்குள் தங்கச் சங்கிலியை பதுக்கி வைத்துள்ளமை தெரியவந்துள்ளது. இதனையடுத்து மேற்கொண்ட விசாரணைகளில் மூன்று இளம் பெண்கள் இணைந்து தங்கச் சங்கிலியை மிகவும் சூட்சுமமாகத் திருடியுள்ளமை தெரியவந்துள்ளது. திருட்டின் போது ஏனைய இருபெண்களும் அவர்கள் கையிலிருந்த குடை மற்றும் கைப்பை என்பவற்றால் மறைத்து உதவியுள்ளனர். சந்தேகத்தில் கைதான மூவரும் 18 முதல் 22 வயதுடையவர்கள் என்றும் அவர்கள் புத்தளம், திருகோணமலை மற்றும் கிரேண்ட்பாஸ் ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

எனவே, இவர்கள் ஒரு குழுவாக இருந்து மேற்படி திருட்டுத் தொழிலைச் செய்பவர்களாக இருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளதுடன், இது தொடர்பாக ஏனைய பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவித்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## பரிகார பூஜையின் பெண் உயிரிழப்பு:

# பூசாரிக்கும் அவரின் காதலிக்கும் எதிர்வரும் 27வரை விளக்கமறியல்

(கண்டி நிருபர்)

"சாந்தி கர்ம" என்ற தோஷம் கழிக்கும் நிகழ்வின்போது பெண்ணொருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் சந்தேக்ததில் கைதான பூசாரி மற்றும் அவரின் காதலி ஆகிய இருவரும் எதிர்வரும் 27ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மாத்தளை, நாவுல பதில் நீதவான் சியாமலி விஜயரத்ன முன்னிலையில் மேற்படி சந்தேக நபர்களை ஆஜர்ப்படுத்தியபோதே அவர் மேற்படி உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

இது பற்றி மேலும் தெரியவருவதாவது:-

மாத்தளை, லக்கல பிரதேசத்தில் 48 வயது பெண்ணொருவருக்கு புத்திர பாக்கியம் கிடைக்க பரிகாரப் பூஜை செய்தபோது சம்பந்தப்பட்ட பெண்ணுக்கு மந்திரம் ஓதி செவ்விளநீர் பருகக் கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு 21 செவ்விளநீர் கொடுக்கப்பட்டதாகவும் அதன்போது குறித்த பெண் சுகவீனமுற்றுள்ளார்.

அதனையடுத்து 25 வயதுடைய பூசாரியால் மஞ்சள் கலந்த நீர் வழங்கப்பட்டுள்ளது.

இதனால் கடுமையான உடல் உபாதைக்குள்ளான பெண் வைத்திய சாலைக்கு கொண்டுசெல்லப் பட்டுள்ளார். தம்புள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டபோது அவர் உயிரிழந்துவிட்டதாகத் தெரிவித்துள்ளனர்.

சாந்தனி குமாரி ஏக்கநாயக்கா என்ற பெண்ணே சம்பவத்தில் மரணித்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை லக்கல பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.





சப்ரகமுவ மாகாணத்தில் கல்வியியல் கல்லூரி டிப்ளோமாதாரிகள் மற்றும் கல்வியியல் பட்டதாரிகள் 739 பேருக்கு ஆசிரிய நியமனம் வழங்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை (16) சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவின் திசாநாயக்க தலைமையில் சப்ரகமுவ மாகாண சபையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவின் திசாநாயக்க, இராஜாங்க அமைச்சர்களான கனக ஹேரத், ஜானக வக்கும்புர, பாராளுமன்ற உறுப்பினர்களான சுதத் மஞ்சுல, காமினி வலேபொட, உதயகாந்த குணதிலக்க, சப்ரகமுவ மாகாண சபையின் தலைவர் கஞ்சன ஜயரத்ன, மாகாண பிரதான செயலாளர் மஹிந்த எஸ்.வீரசூரிய உட்பட கல்வி அதிகாரிகள், அரச அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# கண்டியில் திண்மக் கழிவு முகாமை



(கண்டி நிருபர்)

உலக மரபுரிமை நகரான கண்டியை சுத்தமாகவும் அழகாகவும் வைத்திருக்கும் நோக்கில் இரண்டு தனியார் நிறுவனங்கள் நகரின் திண்மக்கழிவுகளை முகாமை செய்ய நடவடிக்கை எடுத்துள்ளன.

மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகேயின் திட்டத்தின் அடிப்படையில் இதற்கு 'அழகிய இலங்கை' அமைப்பும் சிலோன் கோல்ட் நிறுவனத்தின் ஹெலிபண்ட் ஹவுஸ் நிறுவனமும் முன்வந்துள்ளன.

இது தொடர்பான வைபவமொன்று கண்டி நகரில் அமைந்துள்ள சஹஸ் உயன பூங்காவில் இடம்பெற்றபோது அதிதிகள் வருகை தருவதைப் படத்தில் காணலாம்.

# மருதங்கேணியில் எதிர்ப்புப் போராட்டம்





கஜேந்திரகுமார் மற்றும் அவரது சகாக்கள் கைதுசெய்யப்பட்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்றுக்காலை வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலகம் முன்பாக போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

மகளிர் அமைப்புகளால் முன்னெடுக்கப்பட்ட இப்போராட்டத்தில் வடமராட்சி கிழக்கு உட்பட்ட மகளிர் அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் கலந்து கொண்டனர்.

பொலிஸாரின் அராஜகம் ஒழிக! மருதங்கணி பொலிஸாரே! பொய் வழக்கு போடாதே இந்த மண் எங்களின் சொந்த மண்; மருதங்கேணி எங்கள் சொத்து; அபகரிக்காதே - அபகரிக்காதே நிலங்களை அபகரிக்காதே-போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட சுலோக அட்டைகளை போராட்டக் காரர்கள் ஏந்தியிருந்தனர்.

# இந்த மண்ணில் எமது மக்கள் தலை நிமிர்ந்து வாழவேண்டும்

## யாருக்கும் கைகட்டி சேவகம் செய்யவேண்டியதில்லை என்கிறார் சுரேஷ்



(மன்னார் நிருபர்)

ஈழத்தமிழர்களின் இழப்பு சொல்லில் அடங்காது. இந்த மண்ணில் பாரிய இனப்படு கொலை நடந்து முடிந்துள்ளது. இலட்சக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இந்நிலையில், எமது மக்கள் உரிமைகளைப் பெற்று இந்த மண்ணில் தலைநிமிர்ந்து வாழவேண்டும் என ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

தியாகிகள் தின நினைவேந்தல் நிகழ்வு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை (18) மாலை ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் மன்னார் அலுவலகத்தில் கட்சியின் மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஆர்.குமரேஸ் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது கட்சியின் முக்கியஸ்தர்கள், ஆதரவாளர்கள், உறுப்பினர்கள் கலந்து கொண்டு சுடர் ஏற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

இந்நிகழ்வில் அவர் மேலும் உரையாற்றுகயில், ஈ.பி.ஆர்.எல்.எவ்,ரெலோ,புளொட்,தமிழ்த் தேசியக் கட்சி, ஜனநாயக கட்சி ஆகிய கட்சிகள் ஒன்றிணைந்து உருவாக்கியுள்ள யாப்பை அனைவரும் ஏகமனதாக ஏற்றுக்கொண்டுள்ளோம்.

முன்னர் தமிழரசுக் கட்சியினர் யாப்பைத் தயாரிக்க முடியாது என்று சொன்னார்கள். இன்று குறித்த 5 கட்சிகளுக்கும் ஒரு நிர்வாகத்தைத் தெரிவு செய்துள்ளோம்.

கட்சிக்கான செயலாளர்,பேச்சாளர், தேசிய அமைப்பாளர் ஆகியோரையும் நியமித்து நிர்வாகக் கட்டமைப்பை ஏற்படுத்தியுள்ளோம். நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமென்பதே எமது நோக்கம்.

எதிர்காலத்தில் நாங்கள் அரசாங்கத்துடன் பேசுவதாக இருந்தால் தமிழரசுக்கட்சி, சி.வி.விக்னேஸ்வரன் போன்றவர்களையும் அழைத்து அனைவரும் இணைந்து ஒரே குரலில் பேசவேண்டும் என முடிவெடுத்துள்ளோம்.

நாங்கள் ஏனையவர்களுக்கு முன்மாதிரியாக செயற்பட வேண்டும்.

ஈழத் தமிழர்களின் இழப்பு சொல்லில் அடங்காது. இந்த மண்ணில் பாரிய இனப்படுகொலை நடந்து முடிந்துள்ளது. இலட்சக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இந்நிலையில் எமது மக்களின் உரிமைகளைப் பெற்று நாங்கள் தலை நிமிர்ந்து நிற்க வேண்டும்.

இன்று ஜனாதிபதிக்கு பாராளுமன்றத்தில் பலம் கிடையாது. அவர் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவர்.அவருக்கு பாராளுமன்றத்தில் பொதுஜன பெரமுனவின் ஆதரவு மட்டுமே உள்ளது. அவரால் புதிய விடயங்களைக் கொண்டுவர முடியாது. இந்நிலையில், 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துமாறே கோருகிறோம்.

அது ஒரு சட்டமாகவே உள்ளது. அதனை நிறைவேற்றுவதால் எவ்வித பிரச்சினையும் கிடையாதென ஒட்டு மொத்த சிங்களத் தரப்பும் கூறுகின்றன. இந்நிலையில் அதனை நிறைவேற்றுவதில் ஜனாதிபதிக்கு என்ன பிரச்சினை உள்ளது?எனவே, நாங்கள் அனைவரும் ஒன்றாக இணைந்துகொண்டால் மாத்திரமே இந்த விடயங்களில் வெற்றிகொள்ள முடியும். இது காலத்தின் தேவையாகும் - என்றார்.



ஹஜ் பெருநாளை முன்னிட்டு நாதியா யாகூப் நடத்திய விற்பனைக் கூடமும் கண்காட்சியும் வெள்ளவத்தை மியாமி வரவேற்பு மண்டபத்தில் இடம்பெற்றன. இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்த இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் புரவலர் ஹாஷிம் உமர், திருமதி ஹாஷிம் உமர் இணைந்து காட்சிக் கூடத்தைத் திறந்துவைத்து பார்வையிட்டனர்.இந்நிகழ்வில் சுயாதீன தொலைக்காட்சி சேவையின் செய்திப் பிரிவின் உதவி முகாமையாளர் நலிந்தா உதார பதிரன, அஹச மீடியாவின் தலைவி பிரியங்கா பண்டார, நதியா யாகூப் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

## கொழும்பு ஹமீட் அல் - ஹுசைனியா கல்லூரியின் விளையாட்டுப்போட்டி




(அஷ்ரப் ஏ. சமத்)

கொழும்பு ஹமீட் அல் - ஹுசைனியா கல்லூரியின் விளையாட்டுப்போட்டி எதிர்வரும் 24ஆம் 25 ஆம் திகதிகளில் பொரளை, சிறைச் சாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிலையில், விளையாட்டுப்போட்டி தொடர்பான கலந்துரையாடலும் ரீசேட் அறிமுகமும் கல்லூரியின் பௌஸி மண்டபத்தில் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத் தலைவர் இன்சாப் பரூன் தலைமையில் நடைபெற்றன.

இந் நிகழ்வில் கல்லூரியின் அதிபர் எம்.ஆர்.எம். றிஸ்கி, செயலாளர் எம். அஹ்லம், ஹிரோஸ் காதர், ஆதிப் ஹசன் உட்பட அனுசரணையாளர்கள், பழைய மாணவத் தலைவர்கள், செயலாளர்கள் கலந்துகொண்டனர்.

### கொத்மலை பிரதேச செயலகப் பிரிவுகளில்

# கட்டாக்காலி எருமை மாடுகளை திருடும் சம்பவங்கள் அதிகரிப்பு

(தலவாக்கலை நிருபர்)

கொத்மலை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கிராமங்களில் கட்டாக்காலி எருமை மாடுகளை இனந்தெரியாதோர் இறைச்சிக்காக திருடிச் செல்லும் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கொத்மலை, கடதொர, ரன்மல்ஹா பிரதேசத்தில் நேற்று முன்தினம் (18) இரவு எருமை மாடொன்றைக் கொன்று அதன் தலையை வீதியில் வீசிவிட்டு எஞ்சிய பாகங்களை இறைச்சிக்காக சிலர் எடுத்துச் சென்றுள்ளனர். இச்சம்பவங்கள் மேற்குறித்த பிரதேசங்களில் தொடர்கின்றன.

குறித்த பிரதேசங்களில் பெரும்பாலான விலங்குகள் மக்களால் கைவிடப்பட்டமையினால் அவை தற்போது காட்டு எருமைகளாக மாறியுள்ளதாக மலையக சுற்றாடல் அமைப்புகள் தெரிவிக்கின்றன. இந்நிலையில், வனப் பகுதிகளை அண்மித்து வாழும் மக்களில் சிலர் கட்டாக்காலி எருமை மாடுகளை இறைச்சிக்காக வேட்டையாடி வருகின்றனர்.எனவே, இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனஞ்செலுத்தி எருமை மாடுகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# வயோதிபப் பெண்ணை தாக்கி நகை கொள்ளை



இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பண்டத்தரிப்பு - வடலியடைப்பு பகுதியில் உள்ள வீடொன்றிலிருந்து நேற்றிரவு 19 பவுண் நகை மற்றும் ஒரு தொகைப் பணம் என்பன கொள்ளையிடப்பட்ட சம்பவம் இடம்பெற்றுள்ளதாக இளவாலைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் குறித்து தெரியவருவதாவது, பண்டத்தரிப்பு - வடலியடைப்பு பகுதியில் உள்ள வீடொன்றில் 63 வயதுப் பெண்ணொருவர் தனியாக வசித்து வந்துள்ளார். இந்நிலையில், நேற்று முன்தினமிரவு அவரின் வீட்டை உடைத்து உள்ளே சென்ற கொள்ளையர்கள் அவரைக் கடுமையாகத் தாக்கி நகைகளைத் தருமாறு துன்புறுத்தியுள்ளனர். அதன்பின்னர் வீட்டிலிருந்த 19 பவுண் நகைகள் மற்றும் ஒரு தொகைப் பணம் என்பவற்றைத் திருடிச் சென்றுள்ளனர்.

இதன்போது தாக்குதலுக்குள்ளான வயோதிபப் பெண் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். இச்சம்பவம் குறித்து இளவாலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த பகுதிக்கு விரைந்த தடயவியல் பொலிஸார் கொள்ளையர்களுடையதென சந்தேகிக்கப்படும் மாதிரிகளைப் பெற்றுச் சென்றுள்ளனர்.

# கிளிநொச்சியில் இரத்ததான முகாம்



(மு.தமிழ்ச்செல்வன்)

கிளிநொச்சி மக்கள் வங்கியின் ஊழியர் நலன்புரிச் சங்கம் நடத்திய இரத்ததான நிகழ்வு கடந்த சனிக்கிழமை வங்கி அலுவலகத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் 97பேர் கலந்துகொண்டு இரத்ததானம் செய்தனர்.

இந்நிகழ்வில் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரும் யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளருமான டாக்டர் த. சத்தியமூர்த்தி, கிளிநொச்சி மக்கள் வங்கிக் கிளையின் முகாமையாளர் பிரதீபன் ஆகியோர் கலந்துகொண்டனர். இதன்போது சேகரிக்கப்பட்ட இரத்தம் கிளிநொச்சி மாவட்டவைத்தியசாலைக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஜாமிய்யா நளீமிய்யா கலாபீட பொன்விழா

(பேருவளை நிருபர்)

பேருவளை ஜாமிய்யா நளீமிய்யா கலாபீடத்தின் பொன்விழா நிகழ்வு எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கலாபீடத்தின் தலைவர் யாகூத் நளீம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் தென்கிழக்குப் பல்கலைக்கழக வேந்தரும் ஜாமிய்யா நளீமிய்யா கலாபீட ஆளுநர் சபை உறுப்பினருமான கலாநிதி ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா பிரதம அதிதியாகவும்,

வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.யூ.எம். அலி ஸப்ரி கௌரவ அதிதியாகவும் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ரஞ்சித் பண்டார, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம், பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் ஆகியோர் விசேட அதிதிகளாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

வயம்ப பல்கலைக்கழக பேராசிரியர் கே.பி. ரேணுக சில்வா பேருரை நிகழ்த்துவார்.

பொன்விழாவை முன்னிட்டு விசேட பொன்விழாமலர் ஒன்றும் இதன்போது வெளியிடப் படவுள்ளது.

கலாபீடத்தின் தலைவர் யாகூத் நளீம், கலாபீட முதல்வர் அஷ்ஷெய்க் ஏ.ஸீ. அகார் முஹம்மத் (நளீமி) உட்பட அதிதிகள் உரையாற்றவுள்ளனர். உலமாக்கள், புத்திஜீவிகள், அரசியல் பிரமுகர்கள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், வெளிநாட்டு ராஜதந்திரிகள் எனப் பலரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் ஜாமிய்யா நளீமிய்யாவில் ஏழு வருட கற்கை நெறியை நிறைவுசெய்த சுமார் 240 பேருக்கு பட்டமளிப்பு இடம்பெறவுள்ளமை விசேட அம்சமாகும்.

## ஹெரோயின் வைத்திருந்த ஒருவர் சந்தேகத்தில் கைது !

ஹெரோயின் கடத்தல்காரர் என சந்தேகிக் கப்படும் "ஜோலா" என்பவர் மொனராகலை வைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள பஸ் தரிப்பிடத்தில் வைத்து 18ஆம் திகதி கைது செய்யப்பட்டதாகவும் அவரிடமிருந்து 5,503 மில்லி கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டதாகவும் மொனராகலை பொலிஸ் நிலைய போதை ஒழிப்புத் தடுப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

மொனராகலை பொலிஸ் நிலைய போதை ஒழிப்புத் தடுப்புப் பிரிவினருக்கு கிடைத்த தகவலொன்றுக்கமைய கடந்த 18ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே மேற்படி சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் தம்பகல்ல, கிரிவெல்கொட, கன்வன்வ பிரதேசத்தில் நீண்ட காலமாக ஹெரோயின் கடத்தலில் ஈடுபட்டு வரும் வர்த்தகர் என ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

# காணி அபகரிப்பில் ஈடுபடுவோரால் கால்நடைகளுக்கு அச்சுறுத்தல்

## பாதுகாக்குமாறு பண்ணையாளர்கள் வேண்டுகோள்

(கனகராசா சரவணன்)

மயிலத்தமடு, மாதவனை கால்நடை மேய்ச்சல் தரைப் பகுதியில் இனந்தெரியாதோரால் தொடர்ந்தும் கால்நடைகள் வெட்டப்பட்டும் கொல்லப்பட்டும் வருவதாகப் பண்ணையாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மட்டக்களப்பு மாவட்ட கிரான் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள மேய்ச்சல் தரைக் காணியை சிங்களவர்கள் அத்துமீறி அபகரித்து வரும் சம்பவம் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றது.

இந்நிலையில், நேற்றைய தினமும் கால்நடையொன்று இறைச்சிக்காக வெட்டப்பட்டுள்ளது.

இச்செயற்பாடானது கால்நடைகளுக்கு பாதுகாப்பற்ற நிலையையே ஏற்படுத்தியுள்ளது. எனவே, இந்த செயற்பாட்டில் ஈடுபடுபவர்களை பொலிஸார் கண்டுபிடித்து அவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கவேண்டும் என கால்நடையாளர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று வீதம் (19.06.2023)

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 202.5061 | 217.0708 |
| கனேடியன் டொலர் | 223.5057 | 239.6504 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 41.0115 | 44.5837 |
| யூரோ | 324.0691 | 345.7238 |
| ஜப்பான் யென் | 2.0936 | 2.2297 |
| சிங்கப்பூர் டொலர் | 220.9127 | 236.2708 |
| ஸ்ரேலிங் பவுன் | 380.0519 | 404.6920 |
| சுவிஸ் பிரான்ங் | 330.6569 | 354.3185 |
| ஐ.அ. டொலர் | 297.5388 | 315.1281 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 820.1809 |
| குவைட் | குவைட் தினார் | 1006.8054 |
| ஓமான் | ஓமான் றியால் | 803.1482 |
| கட்டார் | கட்டார் றியால் | 84.8285 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 82.4423 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 84.1842 |

# சாய்ந்தமருது அல்-ஹிலாலில் முதலுதவிப் பயிற்சிப்பட்டறை



(பொலிவேரியன் செய்தியாளர்)

சென்.ஜோன் அம்பியூலன்ஸ் ஸ்ரீலங்கா அமைப்பினால் சாய்ந்தமருது அல்-ஹிலால் வித்தியாலய மாணவர்களுக்கு முதலுதவி அறிமுகத்துடன் அமைந்த பயிற்சிப்பட்டறை ஞாயிற்றுக்கிழமை(18) இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் யூ.எல்.நஸார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பொறியியலாளர் எம்.ரீ.கமால் நிசாத் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு மாணவர்கள் பயன்பெறும் வகையிலான கருத்துகளை வழங்கினார்.

இந்நிகழ்வில் வளவாளர்களாக சென்.ஜோன் அம்பியூலன்ஸ் ஸ்ரீலங்கா அமைப்பின் அம்பாறை மாவட்ட ஆணையாளரான கெப்டன் எம்.ரீ.நௌஸாத் வபி மற்றும் உதவி ஆணையாளரான மேஜர் கே.எம்.தமீம் ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கு முதலுதவிப் பயிற்சிகளை வழங்கினர்.

இதன்போது பிரதி அதிபர் நுஸ்ரத் பேகம், உதவி அதிபர் ஐனூல் மர்சுனா மற்றும் ஆசிரியர்களான ஏ.எல்.எம்.இர்ஸாத், எம்.எஸ்.எம்.நுஸ்கி, எஸ்.ஐ.நஸீஹா பேகம் உட்பட பழைய மாணவ சங்க செயலாளர் எம்.ஐ.சர்ஜுன் ஆகியோரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# கிழக்கு மாகாண உரப் பற்றாக்குறைக்கு தீர்வு

(கனகராசா சரவணன், மட்டக்களப்பு, மீனோடைக்கட்டு, கிண்ணியா செய்தியாளர்கள்)



கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவிடம் முன்வைத்த கோரிக்கைக்கமைவாக கிழக்கு மாகாணத்தில் உரப் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு உரத்தை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கமத்தொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

அண்மையில் உரப்பற்றாக்குறையால் தமது விவசாய நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அதற்குரிய தீர்வை பெற்றுத்தருமாறும் கிழக்கு மாகாண ஆளுநரிடம் மூன்று மாவட்ட விவசாயிகளும் கோரிக்கை முன்வைத்தனர்.

முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கமைவாக, விரைவாக உரிய தீர்வு பெற்றுத்தரப்படுமென விவசாயிகளுக்கு வாக்குறுதியளித்திருந்த ஆளுநர், விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவின் கவனத்துக்கு இந்த விடயத்தை கொண்டுசென்றதுடன் உரப் பற்றாக்குறைக்கு தீர்வையும் பெற்றுக்கொடுத்துள்ளார்.

அதன் பிரகாரம் கிழக்கு மாகாணத்தில் உரப் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு போதிய உரத்தை விநியோகிப்பதற்கான நடவடிக்கைகளை கமத்தொழில் அமைச்சு ஆரம்பித்துள்ளது. பல காலமாக நிலுவையில் இருந்த பிரச்சினைக்கு கிழக்கு மாகாண ஆளுநரால் உடனடி தீர்வு வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.



மட்டக்களப்பு குருக்கள்மடம் அருள்மிகு கிருஸ்ணன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் ஞாயிற்றுக்கிழமை(18) பூர்வாங்க கிரியைகளுடன் ஆரம்பமாகின. இதன்போது விசேட கிரியை, அபிஷேகம் போன்ற பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றன. வாஸ்து சாந்தி விழாவுடன் ஆரம்பமான இவ்விழா தொடர்ந்து 07 நாட்கள் இடம்பெறவுள்ளது. இதன்போதான தீர்த்தோற்சவம், சங்காபிஷேகம் என்பன ஆனிஉத்திர நட்சத்திரத்தில் எதிர்வரும் 26ஆம் திகதி நடைபெறவுள்ளது.
(குருக்கள் மடம் செய்தியாளர்)

## கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# உளநலப்பிரிவு நிலையத்தில் மாதாந்தம் 65 பேர் சிகிச்சை

(நற்பிட்டிமுனை செய்தியாளர்)

கல்முனை வடக்கு ஆதார வைத்திய சாலையின் உளநலப்பிரிவு நட்பு நிலையத்தின் மூலம் மாதாந்தம் 65 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இவர்களில் அதிகளவானோர் வன்முறைக் குட்பட்ட பெண்களாவர்.

இங்கு இவர்களுக்கு சிகிச்சையளிக்கப் படுவதோடு சிறந்த வழிகாட்டலும் ஆலோசனையும் வழங்கப்படுகின்றது.

விசேட பயிற்சிபெற்ற பெண்ணொருவர் மூலம் பயிற்சிகள் வழங்கப்படுவதாகவும் துறைசார் நிபுணத்துவம் பெற்ற விசேட வைத்திய நிபுணர்கள் இந்தப் பயிற்சியை வழங்குவதாகவும் நட்புறவு நிலையத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தனர்.

கணவர்மார் குடித்துவிட்டு மனைவிமாரை துன்புறுத்துதல் உள்ளிட்ட பல்வேறு காரணிகளால் தற்கொலை முயற்சிக்கு ஆட்படுதல் மற்றும் பொருளாதார நெருக்கடி போன்றவையே இதற்கு காரணிகளாக அமைவதாகவும் தெரிவித்த அவர், 18 வயதுக்கு கீழ்ப்பட்ட குழந்தைகளில் விசேட தேவையுடையோர் 35 பேர் இங்கு சிகிச்சை பெற்றுவருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# 'குளிருக்கு அழுத மழை' கவிதை நூல் வெளியீடு



(எல்.ஜவ்பர்கான்)

காத்தான்குடி இஸ்லாமிய இலக்கியக் கழகம் ஏற்பாடு செய்த கவிக்கோன் இல்மி அஹமட்லெப்பை எழுதிய 'குளிருக்கு அழுத மழை' எனும் கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வு காத்தான்குடி மத்திய கல்லூரி தேசிய பாடசாலை மண்டபத்தில் கழகத்தின் தலைவர் கவிமாமணி ரீ.எல்.ஜவ்பர்கான் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை(18) மாலை நடைபெற்றது.

இதன்போது பிரதம அதிதியாக வெளிவிவகார அமைச்சின் பணிப்பாளரும் ஓமான் நாட்டுக்கான முன்னாள் இலங்கை தூதுவருமான ஓ.எல்.அமீர் அஜ்வத், கௌரவ அதிதிகளாக தென்கிழக்கு பல்கலைக்கழக முகாமைத்துவ துணைத் தலைவர் பேராசிரியர் எம்.முஸ்தபா, மனித உரிமை ஆணைக்குழுவின் கல்முனை பிராந்திய இணைப்பாளர் ஏ.சீ.ஏ.அஸீஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நூலாசிரியர் 'கவியருவி', 'இலக்கியச் செம்மல்' ஆகிய விருதுகள் வழங்கி பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். ஏறாவூர் அலிகார் மத்திய கல்லூரி பிரதி அதிபர் கவிஞர் எம்.நௌசாத் நூல் நயவுரை வழங்கினார்.

# உள்ளூராட்சி மன்ற பெண்களுக்கான வில் கிளப் வலையமைப்பு நிகழ்வு



(திகாமடுல்ல செய்தியாளர்)

உள்ளூராட்சி மன்ற பெண்களுக்கான வில் கிளப் மற்றும் பலதரப்பட்ட பங்குதாரர்களுடனான வலையமைப்பு நிகழ்வு அம்பாறை தனியார் விடுதியொன்றில் அண்மையில் நடைபெற்றது.

சேர்ச் போ கொமண் நிறுவனத்தின் சிரேஷ்ட திட்ட முகாமையாளரும் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டாளருமான சதாத் தலைமையில் ஆரம்பமான இந்நிகழ்வில் உள்ளூராட்சி மன்றங்களில் உறுப்பினர்களாக பெண்களினால் தயாரிக்கப்பட்ட திட்ட முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டன.

இத்திட்ட முன்மொழிவுகளில் நிகழ்ச்சித் திட்ட தயாரிப்பு, குறிகாட்டிகள் தொடர்பாக சதாத்தும், பரிந்துரைகள் தொடர்பாக வளவாளர் ரெமோ சிஹானும் உள்ளூராட்சி மன்ற பெண் உறுப்பினர்களுக்கு தெளிவுபடுத்தினர்.

மேலும், உள்ளூராட்சி மன்ற பெண் உறுப்பினர்களினால் தயாரிக்கப்பட்ட திட்ட முன்மொழிவுகள் பலதரப்பட்ட பங்குதாரர் குழு உறுப்பினர்கள் முன் சமர்ப்பிக்கப்பட்டு அவர்களது கருத்துரைகளும் உள்வாங்கப்பட்டன. இந்நிகழ்வை சேர்ச் போ கொமண் கிறவுண்ட் நிறுவனம் ஒழுங்கு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

**அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்துக்குட்பட்ட பாலமுனை மற்றும் ஒலுவில் கிராமங்களில் அமைக்கப்பட்ட சமுர்த்தி சௌபாக்கியா வீடுகள் மூன்றினை திறந்து வைக்கும் நிகழ்வு அண்மையில்(16) இடம்பெற்றது. அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அஹமது சாபீர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அதிதியாக சமுர்த்தி மாவட்ட பணிப்பாளர் எம்.எஸ்.எம். சப்ராஸ் கலந்து கொண்டதுடன் உதவி பிரதேச செயலாளர் சட்டத்தரணி நஹிஜா, சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.எம்.ஹமீட், முகாமைத்துவப் பணிப்பாளர் ரீ.பரமானந்தம், திட்ட முகாமையாளர் எஸ்.எல்.அஸீஸ், வங்கி முகாமையாளர்களான எம்.ஐ.நஜீப், எம்.யூ.நபீஸா உட்பட சமுர்த்தி சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எஸ்.உனைஸ், திட்டம் உத்தியோகத்தர் எம்.எப்.நவாஸ், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுதாய அடிப்படை அமைப்புகளின் நிர்வாகிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (திராய்க்கேணி செய்தியாளர்)**





**அக்கரைப்பற்று பிரதேச செயலகத்துக்குட்பட்ட சமுர்த்திப் பயனாளி ஒருவருக்கு வாழ்வின் எழுச்சி வீடமைப்பு அபிவிருத்தி லொத்தர் சீட்டிழுப்பின்மூலம் வெற்றி பெற்றவருக்கு இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான காசோலை வழங்கும் நிகழ்வு அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தில் சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் எம்.ஜே.எம்.நிஹ்மத்துள்ளா தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ரீ.எம்.எம்.அன்சார் அக்கரைப்பற்று 05யைச் சேர்ந்த எம்.எம்.பஸ்மிலாவுக்கு காசோலையை கையளித்தார். இதன்போது சமுர்த்தி திட்ட முகாமையாளர் என்.ரீ.மசூர், சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளர் எம்.சி.எம்.தஸ்லீம் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். (அக்கரைப்பற்று செய்தியாளர்)**

# மருதமுனை மீஸ்டோ அமைப்பின் ரீ-சேட் அறிமுகமும் கல்வியியலாளர் கௌரவிப்பும்





(பி.எம்.எம்.எ.காதர், ஏ.எல்.எம்.ஷினாஸ்)

மருதமுனை மீஸ்டோ அமைப்பின் ரீ-சேட் அறிமுகமும் கல்வியியலாளர்கள் கௌரவிப்பும் சனிக்கிழமை(17) மருதமுனை பொது நூலக மண்டபத்தில் நடைபெற்றது.

அமைப்பின் தலைவர் என்.ஜி.எம்.நாபியு தலைமையில் செயலாளர் பதுறுஸ்மான் பஹத்ஸமானின் நெறிப்படுத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மருதமுனை மீஸ்டோ அமைப்பின் உறுப்பினர்களுக்கு ரீ-சேட் அறிமுகம் செய்யப்பட்டது.

இந்த ரீ-சேட்களுக்கான அனுசரணையை வர்த்தகர் ஏ.எச்.எம்.தஸ்மீம் (முகம்மட் மென்ஸ்வெயார்) வழங்கியிருந்தார். இங்கு மூத்த கல்வியியலாளர்களான ஓய்வு நிலை அதிபர் ஏ.எல்.மீராமுகைதீன், ஓய்வு நிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எல்.ஏ.றஹீம், அல்-மனார் அதிபர் ஐ.உபைதுல்லா ஆகியோருடன் வர்த்தகர் ஏ.எச்.எம்.தஸ்மீம் ஆகியோர் மீஸ்டோ - 2023 விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

அத்துடன் 4ஜி ஹேன்ட்லூம் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் பதுறுஸ்மான் பஹத்ஸமான் விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட நால்வருக்கும் பொன்னாடை போர்த்தி அன்பளிப்புகளை வழங்கினார்.

மேலும் மரணித்த அமைப்பின் உறுப்பினர்களுக்கும் கற்பித்த ஆசிரியர்களுக்கும் துஆப் பிரார்த்தனையும் இடம்பெற்றது. இங்கு நடைபெற்ற விருந்துபசாரத்தை ஏ.சி.எம். நௌசாத் ஏற்பாடு செய்திருந்தார். ஐ.எல்.எம்.முபீன் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளராக கடமையாற்றினார். அமைப்பின் பொருளாளர் ஏ.எம்.றிஸா அஹமட் ஏனைய ஏற்பாடுகளைச் செய்திருந்தார். ரீ-சேட்டுக்கான வடிவமைப்பை அமைப்பின் ஊடக இணைப்பாளர் இஸட்.எம்.மின்ஹாஜ் செய்திருந்தார். எம்.ஐ.இஸ்மதீன் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.



கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையில் இடம்பெற்ற கணித ஒலிம்பியாட் போட்டியில் அட்டாளைச்சேனை அந்-நூர் மகா வித்தியாலய மாணவர்களான ஜே.இஸ்ஸத் பானு, எம்.எம்.அஹமட் ஆகியோர் அதிகூடிய புள்ளிகளைப்பெற்று தேசிய மட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தமது வலயத்துக்கும் பாடசாலைக்கும் பெருமை சேர்த்த மாணவர்களுக்கு பாடசாலை சமூகத்தினர் பாராட்டுகளைத் தெரிவிப்பதோடு சாதனைக்குரிய மாணவர்களை பயிற்றுவித்த ஆசிரியர்கள், பாடசாலை அதிபர், பிரதி அதிபர்கள் மற்றும் ஏனைய ஆசிரியர்களுக்கும் பாடசாலை சமூகத்தினர் நன்றி தெரிவிக்கின்றனர். (பொத்துவில் செய்தியாளர்)

# பொதுப் போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்கும் சட்டவிரோத மீன் வியாபாரிகளுக்கெதிராக நடவடிக்கை

(பாறுக் ஷிஹான்)

பொதுப் போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்கின்ற சட்டவிரோதமாக மீன் விற்பனை செய்கின்ற வியாபாரிகளுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

அம்பாறை, நிந்தவூர் பிரதேச சபைக்குட்பட்ட பிரதான வீதிகள், நாற்சந்திகள் உள்ளிட்ட முக்கிய பகுதிகளில் அண்மைக்காலமாக சட்டவிரோதமான மீன் விற்பனை நடவடிக்கைகள் அதிகரித்து வருவதுடன் பல்வேறு விபத்துச் சம்பவங்களும் இடம்பெற வாய்ப்புள்ளதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றிருந்தன.

இதனையடுத்து நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, நிந்தவூர் பிரதேச சபை, நிந்தவூர் பொலிஸ் நிலையம் உள்ளிட்ட முக்கிய அதிகாரிகள் ஒன்றிணைந்து இவ்வாறான சட்டவிரோத மீன் விற்பனை நடவடிக்கை இடம்பெறும் இடங்களை அடையாளப்படுத்தி எச்சரிக்கை அடங்கிய துண்டுப்பிரசுரங்கள் ஒட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





இந்தத் துண்டுப்பிரசுரத்தில் ஏலவே நிந்தவூர் பிரதேச சபை சட்டவிரோத மீன் விற்பனை நடவடிக்கைகளைத் தவிர்க்குமாறு கூறி பிரேரணைகளை நிறைவேற்றி கட்டுப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், மீண்டும் இவ்வாறான சட்டவிரோத வியாபாரங்கள் குறிப்பாக, மீன் விற்பனை முக்கிய சந்திகளில் சட்டவிரோதமாக அதிகரித்துள்ளதாக பொதுமக்களிடம் இருந்து தற்போது பல்வேறு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதையடுத்து இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது நேற்று(19) தியேட்டர் வீதி அலியாண்டை சந்தியில் இவ்வாறு எச்சரிக்கை துண்டுப் பிரசுரம் ஒட்டப்பட்டதுடன் நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் கே.எல்.எம்.றயீஸ், நிந்தவூர் பிரதேச சபைச் செயலாளர் திலகா பரமேஸ்வரன், நிந்தவூர் பொலிஸ் நிலைய அதிகாரிகள், வீதி அபிவிருத்தித் திணைக்கள அதிகாரிகள், நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், வருமான வரி பரிசோதகர்கள், பொதுச்சந்தை குத்தகைக்காரர் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# கல்முனையன்ஸ் போரமினால் குடிநீர் இணைப்புகள் கையளிப்பு



(மாளிகைக்காடு செய்தியாளர்)

'கல்முனை பிராந்திய மக்களின் அடிப்படை தேவைகளில் தன்னிறைவடைதல்' எனும் கல்முனையன்ஸ் போரமின் இலக்கினை அடையும் முகமாக பல்வேறுபட்ட செயற்றிட்டங்கள் கல்முனையன்ஸ் போரமினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அந்தவகையில், தேவையுடைய இனங்காணப்பட்ட 15 பயனாளிக் குடும்பங்களுக்கான குடிநீர் இணைப்புகள் அண்மையில் கையளிக்கப்பட்டன.

கல்முனையிலுள்ள அனைத்து குடும்பங்களுக்கும் சுத்தமான குடிநீர் இணைப்பினை கொண்டுசேர்க்கும் நோக்கில் கடந்த 2017ஆம் ஆண்டு கல்முனையன்ஸ் போரமினால் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட இச்செயற்றிட்டத்தின் கீழ் இதுவரையிலும் சுமார் 135 பயனாளிக் குடும்பங்களுக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 2016ஆம் ஆண்டு கல்முனையன்ஸ் போரமினால் முன்னெடுக்கப்பட்ட கல்முனைக்கான கல்வி, சமூக, பொருளாதார தனிநபர் தகவல் திரட்டின் மூலம் இனங்காணப்பட்ட குடும்பங்களே இச்செயற்றிட்டத்துக்கான பயனாளிகளாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 'எமது உரிமையைப் பாதுகாப்போம்' எனும் கருப்பொருளில் செயலமர்வு

(களுதாவளை செய்தியாளர்)

இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் ஏற்பாட்டில் 'தகவல் அறியும் உரிமை சட்டமூலம் ஊடாக எமது உரிமையைப் பாதுகாப்போம்' எனும் கருப்பொருளில் மட்டக்களப்பு மாவட்ட ஊடகவியலாளர்கள் மற்றும் சிவில் செயற்பாட்டாளர்களுக்கான இரண்டாம் கட்ட செயலமர்வு ஞாயிற்றுக்கிழமை (18) மட்டக்களப்பு ஈஸ்ட் லகூன் தனியார் விடுதியில் நடைபெற்றது.

இச்செயலமர்வில் இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் தகவல் அறியும் உரிமை சட்ட திட்ட உதவியாளர் ஆர்த்தி ரவிவர்மன், விடிவெள்ளி பத்திரிகையின் ஆசிரியர் முகமட் பைரூஸ் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துகளை முன்வைத்தனர்.

தகவல் அறியும் சட்டம், இலங்கை பிரஜைகள் அனைவருக்கும் பொதுவானது. ஊடகவியலாளர்களுக்கும் சிவில் சமூக அமைப்பினருக்கும் சட்டத்தை பயன்படுத்துவதை ஊக்குவிக்கும் முகமாகவே இச்செயலமர்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தகவல் அறியும் சட்டத்தின் ஊடாக ஊடகவியலாளர் ஒருவர் தகவல் அறியும் சட்டத்தை பெறுவதற்கான சந்தர்ப்பத்தையும் அது தொடர்பான சட்ட நுணுக்கத்தினையும் பெறுவதற்கான விண்ணப்பப்படிவங்கள் எவ்வாறு கையாளப்பட வேண்டும் என்பது பற்றியும் மேலும் ஒரு ஊடகவியலாளர் தகவல் அறியும் சட்டத்தின் ஊடாக பெறப்படுகின்ற தகவல்களைக் கொண்டு எவ்வாறு கட்டுரை வடிவாக தயாரித்து அதனை பிரசுரிக்க முடியும் என்பது தொடர்பாகவும் குறித்த பயிற்சிப் பட்டறை நடைபெற்றது.

## போடியார் புலம்பல்!



தமிழ்மக்களுக்கு எதிரான அத்துமீறல்களை அவதானம் செலுத்துமாறு ஆறு புலம்பெயர் அமைப்புகள் அமரிக்க இராஜாங்க அமைசருக்கு முறையிட்டுள்ளதாக செய்தி ஒன்று வந்தது எலுவா? மெய்யா மெய்யா இப்ப வடக்கு கிழக்கு தமிழ்மக்களிட பிரச்சன எல்லாமே சர்வதேசத்துக்கு கொண்டு போய்த்தாங்க எண்டது இப்பயாவது சிறிலங்கா சிங்கள இனவாதிகளுக்கு விளங்கினால் சரிதான் சர்வதேசத்த பகைத்து இஞ்ச ஒண்டுமே புடுங்க ஏலாது விளங்கினால் சரி!

# நோயற்றவையென உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே மாடுகளை அறுக்க அனுமதி

## கல்முனை கால்நடை வைத்திய அதிகாரி தெரிவிப்பு

(சாய்ந்தமருது செய்தியாளர்)



கல்முனை மாநகர சபை எல்லையினுள் உணவுக்காக அறுக்கப்படும் மாடுகள் நன்கு பரீட்சிக்கப்பட்டு, நோயற்ற மாடுகள் என உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே அனுமதி வழங்கப்படுவதாக மாநகர சபையின் கால்நடை வைத்திய அதிகாரி என்.ஏ.வட்டப்பொல தெரிவித்தார்.

இது குறித்து திங்கட்கிழமை(19) ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேலும் கூறியதாவது:-

அண்மைக்காலமாக நாட்டின் சில பகுதிகளில் மாடுகள் சிலவற்றுக்கு ஒரு வகையான நோய் பரவியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்நிலையில், கல்முனை மாநகர சபை எல்லையினுள் உணவுக்காக மாடுகள் அறுக்கப்படுகின்ற விடயத்தில் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகளைக் கடுமையாக நடைமுறைப்படுத்தி வருகின்றோம் என்பதை அறியத் தருகின்றேன்.

குறிப்பாக, விலங்கறுமனைகளுக்கு அறுவைக்காகக் கொண்டு வரப்படுகின்ற மாடுகள் அனைத்தும் எம்மால் நன்கு பரீட்சிக்கப்பட்டு, எவ்வித நோயும் அற்றவை என்று உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே அவற்றை அறுப்பதற்கு அனுமதி வழங்கப்படுகிறது.

நோய்த் தொற்றுக்குள்ளான அல்லது சந்தேகத்துக்கிடமான மாடுகளை அறுப்பதற்கு எம்மால் அனுமதி வழங்கப்படுவதில்லை. மேலும், தற்போதைய சூழ்நிலையில் மாடுகளைக் கொள்வனவு செய்யும்போது அவதானிக்க வேண்டிய விடயங்கள் குறித்து மாட்டிறைச்சிக் கடைக்காரர்களுக்குத் தேவையான அறிவுறுத்தல்களையும் வழங்கியுள்ளோம். ஆகையால், இது விடயத்தில் மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

# க.பொ.த. சா/தர மாணவர்களுக்கான ஆன்மீக - உளவியல் கருத்தரங்கு



(எஸ்.அஷ்ரப்கான்)

கல்முனை ஹுதா பள்ளிவாசல், தஃவா குழுவின் ஏற்பாட்டில் க.பொ.த.சா/தரம் எழுதிய மாணவ, மாணவிகளுக்கான ஆன்மீக, உளவியல் கருத்தரங்கு-2023 மௌலவி சாபித் (ஷரயி, ரியாதி) தலைமையில் சனிக்கிழமை(17) பள்ளிவாசலில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மட்டுப்படுத்தப்பட்ட மாணவ, மாணவிகள் கலந்து பயன்பெற்றனர். உளவியல் ரீதியாக அஷ்-ஷெய்க் அப்துல் ஹமீட்டினால் (ஷரயி) மாணவர்களுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டதுடன் கலாநிதி அஷ்-ஷெய்க் ரிஷாட்டினால்(ரியாதி) இளைஞர் - யுவதிகளுக்கு தேவையான ஆன்மீக வழிகாட்டல்களும் வழங்கப்பட்டன.

கருத்தரங்கின் இறுதி நிகழ்வாக கேள்விகள் கேட்கப்பட்டு சரியான விடையளித்த மாணவ, மாணவிகளுக்கு பெறுமதியான பரிசில்களும் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் உலமாக்கள், நிர்வாக சபை உறுப்பினர்கள், தஃவா குழு உறுப்பினர்கள், பிறை அறிவிப்பாளர் ஏ.ஆர்.எம்.நௌபீல் மற்றும் மாணவ, மாணவிகளும் கலந்து கொண்டனர்.



திருகோணமலை, தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவில் சமஷ்டி ஆட்சி மற்றும் அரசியல் தீர்வு குறித்த கலந்துரையாடல் ஞாயிற்றுக்கிழமை(18) மீராநகர் கிராமத்தில் இடம்பெற்றது. இதன்போது அகம் மனிதாபிமான வளநிலைய(AHRC) நிறுவனத்தின் திட்ட முகாமையாளர், மாவட்ட இணைப்பாளர், கள இணைப்பாளர், தொழில்நுட்ப உத்தியோகத்தர்களும் தம்பலகாம சிவில் அமைப்பின் பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள் மற்றும் சிவில் செயற்பாட்டாளர்களும் கலந்து கொண்டனர். (கிண்ணியா செய்தியாளர்)

## கஞ்சாவுடன் கைதான மூவருக்கு விளக்கமறியல்

(கோணாவத்தை செய்தியாளர்)

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாலமுனை மற்றும் அக்கரைப்பற்று பிரதேசங்களில் கஞ்சாவுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அக்கரைப்பற்று பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின்படி, பிரதம பொலிஸ் பரிசோதகர் எஸ்.எம்.சதாத், பொலிஸ் பரிசோதகர் ஹஸீர் ஆகியோர் தலைமையிலான பொலிஸ் குழுவினர் குறித்த பிரதேசங்களுக்குச் சென்று சந்தேக நபர்களை கைது செய்துள்ளதுடன் அவர்களிடமிருந்த கஞ்சாவையும் கைப்பற்றியுள்ளனர்.

பாலமுனை பிரதேசத்தில் கைதுசெய்யப்பட்ட நபரிடமிருந்து 1000 மில்லி கிராம் கஞ்சாவும் அக்கரைப்பற்றில் கைது செய்யப்பட்ட நபர்களில் ஒருவரிடமிருந்து 750 மில்லிகிராம் கஞ்சாவும் மற்றைய நபரிடமிருந்து 650 மில்லிகிராம் கஞ்சாவையும் மீட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களை அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் பதில் நீதிபதி கே.சமீம் முன்னிலையில் ஞாயிற்றுக்கிழமை(18) ஆஜர்ப்படுத்தியபோது எதிர்வரும் 30ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## அக்கரைப்பற்றில் வீடுடைத்து கொள்ளை

# மயானத்தில் புதைக்கப்பட்ட தொலைக்காட்சிப்பெட்டி மீட்பு

(ஆலையடிவேம்பு செய்தியாளர்)

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அக்கரைப்பற்று 08ஆம் பிரிவின் பழைய ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள வீடொன்றில் ஞாயிற்றுக்கிழமை(18) இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்தில் கொள்ளையிடப்பட்ட தொலைக்காட்சிப்பெட்டி அக்கரைப்பற்று பொது மயானத்தில் புதைக்கப்பட்ட நிலையில் நேற்று(19) நண்பகல் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி சதாத் தலைமையிலான பொலிஸ் குழுவினர் மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டதுடன் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

வீட்டிலிருந்த ஐந்தரை பவுண் அளவான தாலி மற்றும் பெறுமதியான தொலைக்காட்சியொன்றும் திருடப்பட்டுள்ளதாக வீட்டின் உரிமையாளரினால் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில், அங்கிருந்து கொண்டுசெல்லப்பட்ட தொலைக்காட்சிப் பெட்டியும் மயானத்திலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

வீட்டு உரிமையாளர்களான கணவனும் மனைவியும் வெளியூரில் தொழிலின் நிமித்தம் வாழ்ந்துவரும் நிலையில், வீட்டில் யாருமில்லாத சந்தர்ப்பத்திலேயே இச்சம்பவம் இடம்பெறுள்ளதாக அறிய முடிகின்றது.

குறித்த வீட்டின் முன்னால் வசித்துவரும் வீட்டு உரிமையாளரின் தந்தை வழமைபோன்று வீட்டினை பார்வையிடுவதற்காக நேற்றுக் காலை சென்றவேளையிலேயே ஜன்னல் உடைக்கப்பட்டுள்ளதை அவதானித்துள்ளார். இதன் பின்னராக வீட்டின் உள்ளே சென்று பார்த்தபோதே மறைத்து வைக்கப்பட்டிருந்த தாலி உள்ளிட்ட தொலைக்காட்சிப் பெட்டியும் திருடப்பட்டுள்ளதை அறிந்து பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார்.

இதனைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்குச் சென்ற அக்கரைப்பற்று பொலிஸார் விசாரணையினை ஆரம்பித்ததுடன் விசேட தடயவியல் பொலிஸாருக்கும் தகவல் வழங்கியுள்ளனர். இதேநேரம், அக்கரைப்பற்று பொதுமயானத்துக்கு மரணமடைந்த ஒருவரின் உடலை நல்லடக்கம் செய்வதற்காக சென்ற சிலர் அங்கு பெட்டி ஒன்று புதைக்கப்பட்டுள்ளதை அவதானித்து அக்கரைப்பற்று பொலிஸாருக்கு தகவலை வழங்கினர்.

இந்நிலையில் அங்கு விரைந்த பொலிஸார் தொலைக்காட்சிப்பெட்டியினை அடையாளம் காட்ட உரிமையாளரை அழைத்ததுடன் அவரும் தங்களது தொலைக்காட்சிப்பெட்டி என அடையாளம் காட்டியுள்ளார். இதனையடுத்து மீட்கப்பட்ட தொலைக்காட்சிப்பெட்டி பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்ற நிலையில் அக்கரைப்பற்று பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# புறத்தோட்டம் - வாய்க்கால்கட்டு வீதிக்கான புனரமைப்பு வேலைத்திட்டம் முன்னெடுப்பு

(திராய்க்கேணி செய்தியாளர்)

கிறிசலிஸ் நிறுவனத்தின் உதவியுடன் புறத்தோட்டம் கிராமத்தில் முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்தி வேலைத்திட்டங்களை ஆரம்பித்து வைப்பதற்காகவும் மக்களுடனான கலந்துரையாடலுக்காகவும் ஜேர்மன் கெயார் நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் ஜெனிபர் சனிக்கிழமை(17) புறத்தோட்டம் கிராமத்துக்கு வருகை தந்தார்.

இதன்போது, கிறிசலிஸ் நிறுவனத்தின் கிழக்கு மாகாண நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் யூ.எல்.சம்சுதீன், அம்பாறை மாவட்ட இணைப்பாளர் எஸ்.பாஸ்கரன், தொழில்நுட்ப ஆலோசகர் விமன்சா சொய்சா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

வருகை தந்த திட்டப் பணிப்பாளருக்கும் அதிதிகளுக்கும் சனசமூக நிலையத்தின் தலைவர் எஸ்.எம்.அறூஸ் தலைமையில் கிராம மக்களினால் மகத்தான வரவேற்பளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.



கிழக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தின் முழுமையான ஒத்துழைப்போடு உள்ளூர் ஆளுகையில் பெண்களின் வகிபாகம் எனும் மூன்று வருட செயற்றிட்டத்தை கிறிசலிஸ் நிறுவனம் மூன்று மாவட்டங்களிலும் முன்னெடுத்து வருகின்றது.

கிறிசலிஸ் நிறுவனத்தினால் செயற்படுத்தப்பட்டு வரும் ஆளுமை விருத்தி செயலமர்வுகள் மிகவும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் இதன் காரணமாக பல விடயங்களில் தேர்ச்சி பெற்றவர்களாகத் தாம் மாறியுள்ளதாகவும் இதன்போது கலந்துகொண்ட பெண்கள் பலரும் கருத்துத் தெரிவித்தனர். அதேவேளை, சனசமூக நிலைய காரியாலயத்தை புனரமைத்துத் தருமாறும் இன நல்லிணக்கத்தை வளர்ப்பதற்கான செயற்றிட்டத்தை மேற்கொள்ளுமாறும் இதன்போது வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இதன் ஒரு கட்டமாக மிகவும் பின்தங்கிய கிராமங்களில் மக்கள் பாவனைக்கு உதவாத வீதிகளைப் புனரமைக்கும் முகமாக புறத்தோட்டம் வாய்க்கால்கட்டு வீதி தெரிவுசெய்யப்பட்டுள்ளது. இப்பாதை வேலைத்திட்டத்துக்காக சுமார் 16 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் அம்பாறை மாவட்டத்தில் மூன்று பிரதேச சபைப் பிரிவுகள் தெரிவுசெய்யப்பட்டு 15 சனசமூக நிலையங்கள் ஊடாக இவ்வேலைத்திட்டம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# உலக செய்திகள்

# 12 கிலோ எடையில் 'பாகுபலி' சமோசா

### அரை மணி நேரத்தில் சாப்பிட்டால் ரூ.71 ஆயிரம் பரிசு



நீங்கள் பல பிரமாண்ட வடிவங்களை பார்த்திருக்கலாம். ஆனால், 12 கிலோ எடையுள்ள பிரமாண்ட 'பாகுபலி' சமோசாவை பார்த்ததுண்டா? அதை பார்க்கவும் ருசிக்கவும் வேண்டும் என்றால், உத்தரபிரதேச மாநிலம் மீரட் நகரிலுள்ள கவுஷல் சுவீட்ஸ் கடைக்குத்தான் போக வேண்டும்.

இங்குதான், 12 கிலோ எடை கொண்ட பாகுபலி சமோசா தயாரிக்கப்படுகிறது, விற்கப்படுகிறது. கவுஷல் சுவீட்ஸ் கடையை 3ஆவது தலைமுறையாக நடத்தி வருபவர் சுபம் கவுஷல். இவருக்கு ஏதாவது வித்தியாசமாக செய்து வாடிக்கையாளர்களை கவர ஆசை.

அப்போதுதான், பிரமாண்ட பாகுபலி சமோசாவை தயாரிக்கும் யோசனை பிறந்திருக்கிறது. முதலில் 4 கிலோ சமோசாக்களையும் அடுத்து 8 கிலோ சமோசாக்களையும் தயாரித்தவர், தற்போது 12 கிலோ சமோசாவில் வந்து நிற்கிறார். இதன் உள்ளே இடப்படும் உருளைக்கிழங்கு, பட்டாணி, வாசனைப்பொருட்கள், பன்னீர் மற்றும் உலர்பழங்கள் அடங்கிய மசாலாவின் எடை மட்டும் 7 கிலோ.

ஒரு பாகுபலி சமோசாவை தயாரிப்பதற்கு சமையல் கலைஞர்களுக்கு 6 மணி நேரம் பிடிக்கிறது. அதில், இந்த பிரமாண்ட முக்கோண வடிவத்தை எண்ணெய்யில் பொரிப்பதற்கு மட்டும் ஒன்றரை மணி நேரமும் ஆகுமாம். இந்த பாகுபலி சமோசா அறிமுகம் செய்யப்பட்டதுமே ஹிட் ஆகிவிட்டது. பலரும் தங்கள் பிறந்தநாளின்போது கேக்குக்கு பதில் இந்த சமோசாவை வாங்கி வெட்டி பகிர்ந்துண்டு மகிழ்கிறார்களாம். இதுவரை சுமார் 50 பாகுபலி சமோசாக்கள் ஓர்டரின் பேரில் தயாரித்து வழங்கப்பட்டிருக்கின்றனவாம். வெளிமாநிலங்களில் இருந்துகூட, இதை தயாரித்து கொடுக்க முடியுமா என்று விசாரிக்கிறார்களாம். சமூக வலைதளங்களிலும் இது சரமாரியாய் லைக்குகளை அள்ளுகிறது.

இப்படி பாகுபலியின் பலே பிரபலத்தால் உற்சாகம் அடைந்திருக்கும் கடைக்காரர் கவுஷல், ஒரு அதிரடி போட்டியையும் அறிவித்திருக்கிறார். அதாவது, தனிநபராய் அரை மணி நேரத்தில் இந்த சமோசாவை சாப்பிட்டு முடித்து ஏப்பம் விடுபவர்களுக்கு (இந்திய ரூபாபடி) ரூ.71 ஆயிரம் பரிசு.

கவுஷலின் கடையில் கம்பீரமாய் அமர்ந்திருக்கும் பாகுபலி சமோசா, ''என்னை சாப்பிட்டு பார்'' என்று செல்லமாய் மிரட்டிக் கொண்டிருக்கிறது. எல்லாம் சரி, ஒரு பாகுபலி சமோசாவின் விலை என்ன என்று கேட்கிறீர்களா? ரூ.1500 (இந்திய ரூபாபடி) ஆனால் சமோசா பிரியர்களுக்கு இந்த விலை ஒரு விஷயமே இல்லை என்பதற்கு, பாகுபலிக்கு வந்துகொண்டே இருக்கும் ஓர்டர்களே சாட்சி.

# இஸ்ரேல் இராணுவம் துப்பாக்கிச்சூடு: 05 பலஸ்தீனர்கள் பலி; 91 பேர் காயம்



ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக்கரை (West Bank) நகரமான ஜெனின் வீதிகளில் இஸ்ரேல் இராணுவம் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் 05 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் 91 பேர் படுகாயமடைந்துள்ளனர் என பலஸ்தீன் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையே 20ஆம் நூற்றாண்டின் மத்தியிலிருந்து இன்று வரை நீடித்துவரும் எல்லை பிரச்சினை காரணமாக மோதல் இடம்பெற்று வருகிறது. இஸ்ரேல் மீது பலஸ்தீனர்கள் தாக்குதல்கள் நடத்துவதும் இதற்கெதிராக இஸ்ரேல் பதில் தாக்குதல் நடத்துவதும் வழக்கமான ஒன்றாகி விட்டது.

இந்நிலையில் நேற்று (19) ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக்கரை (West Bank) நகரமான ஜெனினில், இஸ்ரேல் இராணுவம் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் பலஸ்தீனர்கள் ஐவர் கொல்லப்பட்டுள்ளதுடன் 91இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த சம்பவம் குறித்து இஸ்ரேல் இராணுவம் உடனடியாக எந்த கருத்தும் தெரிவிக்கவில்லை. இருப்பினும், இந்த மோதலில் பல இஸ்ரேலிய துருப்புகள் காயமடைந்திருப்பதாக இஸ்ரேலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஜெனின் நகரம், வட மேற்குக்கரையிலுள்ள பலஸ்தீனின் ஒரு முக்கிய நகரம். பலஸ்தீன் போராளிகள் நிறைந்த பகுதி. இஸ்ரேலும் பலஸ்தீனர்களும் பல மாதங்களாக வன்முறையில் சிக்கித் தவிக்கின்றனர். குறிப்பாக, மேற்குக்கரை பகுதியில் நடந்த வன்முறைகளில் இந்த ஆண்டு இதுவரை சுமார் 120 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

கடந்த ஆண்டு தொடக்கத்தில் பலஸ்தீனில் வன்முறை வெடித்ததற்கு பதிலளிக்கும் விதமாக இஸ்ரேல் மேற்குக்கரையில் இரவு நேர திடீர் சோதனைகளை நடத்தி வருகிறது. அவ்வாறான காலங்களில், இஸ்ரேலியர்களுக்கு எதிரான பலஸ்தீனின் தாக்குதல்களும் அதிகரித்து வருகின்றன.

உயிரிழந்தவர்களில் பெரும்பாலானோர் போராளிகள் என்று இஸ்ரேல் தெரிவித்துள்ளது. ஆனால், ஊடுருவல்களை எதிர்த்து கல் எறிந்த இளைஞர்கள் மற்றும் மோதலில் ஈடுபடாத மற்றவர்களும் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

# 'கிரீன் கார்ட்' பெறுவதற்கான விதிகளை தளர்த்திய அமெரிக்கா




கிரீன் கார்ட் பெறுவதற்கான விதிகளில் அமெரிக்க குடியுரிமை மற்றும் குடியேற்ற துறை சில தளர்வுகளை அறிவித்துள்ளது.

அமெரிக்காவில் குடியேறியுள்ள வெளிநாட்டவர்கள் அங்கு நிரந்தரமாக வசிப்பதற்காக வழங்கப்படும் கிரீன் கார்ட், ஆண்டுதோறும் ஒரு இலட்சத்து 40 ஆயிரம் பேருக்கு அளிக்கப்படுகிறது. இதில் அதிகபட்சமாக ஒரு நாட்டுக்கு 7 சதவீதம் வழங்கப்படுகிறது.

இந்நிலையில் தற்போது அறிவிக்கப்பட்டுள்ள தளர்வின்படி, கடும் உடல்நல பாதிப்பு, உடல் ஊனம், வேலை பார்க்கும் நிறுவனத்துடன் வழக்கு உள்ளிட்ட பிரச்சினைகளால் கடும் சவால்களை சந்திப்பவர்கள் அதற்கான ஆதாரங்களை அளித்தால் அவர்களுக்கு கிரீன் கார்ட் வழங்கப்படவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

## செய்தித் துளிகள்



★ குடல் அடைப்புகளாலும் வலியாலும் அவதிப்பட்டு வந்த போப் ஆண்டவர் பிரான்சிஸ் (வயது 86) ரோமிலுள்ள ஜெமெல்லி வைத்தியசாலையில் கடந்த 7ஆம் திகதி அனுமதிக்கப்பட்ட நிலையில் அங்கு அவருக்கு குடல் அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

சிகிச்சைக்கு பின் குணமடைந்துள்ள போப் ஆண்டவர் வத்திக்கானுக்கு திரும்பியுள்ள நிலையில், தனக்கு உதவிய மற்றும் தனக்காக பிரார்த்தனை செய்தவர்களுக்கு நன்றி தெரிவித்துள்ளதுடன், கிரீஸ் கடற்பகுதியில் சமீபத்தில் நடந்த படகு விபத்தில் உயிரிழந்தவர்களை நினைவுகூர்ந்ததுடன், உகண்டா பாடசாலையில் இடம்பெற்ற தாக்குதலையும் கண்டித்தார்.

★ உத்தரப் பிரதேசம், பீஹார் மற்றும் ஒடிசா ஆகிய மூன்று மாநிலங்களில் வெப்ப அலை காரணமாக 100 பேர் உயிரிழந்துள்ள நிலையில் பாதிக்கப்பட்ட 400 பேர் பல்வேறு வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

★ இஸ்ரேலில் நீதித்துறை மறுசீரமைப்பு சட்டத்தை முழுமையாக கைவிடும்படி தெரிவித்து மக்கள் வீதிகளில் இறங்கி தொடர் போராட்டம் நடத்தி வருகின்றனர். அதன்படி, நாடு முழுவதும் தொடர்ந்து 24ஆவது வாரமாக சுமார் 150 இடங்களில் போராட்டம் நடைபெற்றது. இதில் இஸ்ரேலின் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் அவிக்டோர் லிபர்மேன் உட்பட சுமார் ஒரு இலட்சம் பேர் கலந்து கொண்டு நீதித்துறை மறுசீரமைப்பு சட்டம் குறித்து தங்கள் அதிருப்தியை தெரிவித்தனர்.

★ மியான்மரில் நேற்று (19) காலை 5.1 ரிச்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

★ மெக்சிகோவின் கடற்கரை பகுதியில் நேற்று(19) 6.3 ரிச்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. எனினும் நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதம் குறித்த தகவல் வெளியாகவில்லை.

# விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

## மொயின் அலிக்கு அபராதம் விதித்த ஐ.சி.சி.



ஆஷஸ் தொடரின் முதல் போட்டியின் போது இங்கிலாந்து வீரர் மொயின் அலி நேர்மைக்கு புறம்பாக நடந்து கொள்ளும் விதிமுறையை மீறியதாக அறிவித்து அபராதம் விதித்துள்ளது.

போட்டியின் இரண்டாவது நாளில் 89ஆவது ஓவரின் போது தன்னுடைய கைகள் ஈரமாவதை தடுத்து, உலர்ந்த வகையில் வைத்திருக்கும் மருந்து போன்ற பொருளை மொயின் அலி பவுண்டரி எல்லையில் நின்று பீல்டிங் செய்யும் போது தடவிக் கொண்டார். அதை பார்த்த நடுவர் ஆண்டி பைக்ராப்ட் கொடுத்த புகாரை ஏற்றுக் கொண்ட ஐ.சி.சி இந்த போட்டியில் மொயின் அலிக்கு 25 சதவீதம் சம்பள அபராதம் மற்றும் ஒரு கருப்பு புள்ளி தண்டனையாக விதிக்கப்படுவதாக அறிவித்துள்ளது.

அதாவது 2.20 விதிமுறைப்படி போட்டியில் விளையாடும் வீரர்கள் நடுவரிடம் கேட்காமல் தங்களுடைய சொந்த நலனுக்காக தன்னிச்சையாக நடந்து கொள்வது குற்றமாகும். அதை செய்த காரணத்தால் அவருக்கு இந்த தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாக ஐ.சி.சி. கூறியுள்ளது. அதே சமயம் அந்த மருந்தை தன்னுடைய கைகளில் மட்டுமே பயன்படுத்தினாரே தவிர பந்துகளில் பயன்படுத்தவில்லை. அதன் காரணமாக 41.3 விதிமுறையை மீறாமல் பந்தை சேதப்படுத்தாத காரணத்தால் மேற்கொண்டு மொயின் அலியிடம் எவ்விதமான விசாரணை நடத்தப்படாது என்று ஐ.சி.சி தெளிவுபடுத்தியுள்ளது.

அதாவது அந்த மருந்தை பந்தை சேதப்படுத்தும் நோக்கத்தில் அதன் மீது பயன்படுத்தாத காரணத்தால் மொயின் அலி மேற்கொண்டு சந்திக்க வேண்டிய விசாரணைகளில் இருந்து தப்பியுள்ளார்.

# சவூதி அணியில் இணையவுள்ள ஐரோப்பிய நட்சத்திரங்கள்



பணம் கொழிக்கும் சவூதி அரேபிய கால்பந்து அணிகளில் கிறிஸ்டியானோ ரொனால்டோ மற்றும் கரீம் பென்செமா போன்றோருடன் ஐரோப்பிய கால்பந்தின் மிகப்பெரிய நட்சத்திர பட்டாளம் இணைய வாய்ப்பிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. சவூதி அரேபியாவின் அல் நஸ்ஸர் அணியில் இணைந்து விளையாடி வருகிறார் போர்த்துகல் லால்பந்தின் உச்ச நட்சத்திரம் கிறிஸ்டியானோ ரொனால்டோ. தற்போது பிரான்சின் கரீம் பென்செமாவும் சவூதி அணி ஒன்றில் இணைந்துள்ளார்.

இந்நிலையில், ஐரோப்பிய கால்பந்தின் உச்ச நட்சத்திரங்கள் 18 பேர் சவூதி அணிகளில் இணைய இருப்பதாக கூறுகின்றனர். Chelsea அணியின் NGolo Kante இந்த வாரத்துக்குள் Al Ittihad அணியில் இணையும் தகவலை உறுதி செய்வார் என்றே நம்பப்படுகிறது. இதேபோன்று போர்த்துகல் அணியின் இன்னொரு நட்சத்திரமான Ruben Neves சவூதி அணி ஒன்றில் இணையவிருக்கிறார். மன்செஸ்டர் சிட்டி அணியின் Riyad Mahrez சவூதியின் Al-Ahli அணியில் இணையவிருக்கிறார். வாரத்துக்கு 460,000 பவுண்டுகள் என அவர் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளார்.

Chelsea அணியின் இன்னொரு வீரர் Hakim Ziyech பணம் கொழிக்கும் சவூதி அணி ஒன்றில் இணைவார் என்றே தகவல் வெளியாகியுள்ளது. Chelsea அணியின் Pierre-Emerick Aubameyang சவூதி அணியில் இணைய வாய்ப்பிருப்பதாகவே கூறுகின்றனர். Real Madrid வீரர் Eden Hazard மற்றும் முன்னாள் Liverpool நட்சத்திரம் Sadio Mane ஆகியோரும் சவூதி அணியில் குறி வைத்துள்ளனர். Liverpool அணியில் இருந்து கடந்த வாரம் விலகியுள்ள Roberto Firmino சவூதி அணி ஒன்றுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

PSG அணியுடனான ஒப்பந்தம் முடிவுக்கு வரும் நிலையில், Sergio Ramos சவூதி அணி ஒன்றில் இணைய வாய்ப்பிருப்பதாக கூறுகின்றனர். இவர்களுடன் இன்னும் சிலரும் சவூதி அரேபியாவை குறிவைக்க வாய்ப்பிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

## தங்கப் பதக்கத்துடன் ஆசிய விளையாட்டுப் போட்டிக்கான தகுதியை பெற்ற கலிங்க குமாரகே




இந்தியாவில் நடைபெற்ற மாநிலங்களுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டியில் பங்கேற்றிருந்த கலிங்க குமாரகே ஆண்களுக்கான 400 மீற்றர் இறுதிப் போட்டியில் இலங்கைக்கு தங்கப் பதக்கத்தை வென்று அசத்தினார்.

கலிங்க குமாரகே போட்டித் தூரத்தை 45.64 செக்கன்களில் நிறைவு செய்து முதலிடம் பிடித்ததுடன், அவரின் அதிசிறந்த நேரப் பெறுதியாகவும் அமைந்தது. இப்போட்டியில் 46 செக்கன்களுக்கும் குறைவான நேரப் பெறுதியில் போட்டியை நிறைவு செய்துள்ளதால், ஆசிய விளையாட்டுப் போட்டிக்கான தகுதியை அவர் பெற்றுக்கொண்டார்.

இந்தியாவின் மாநிலங்களுக்கிடையிலான 62 தேசிய மாநிலங்களுக்கு இடையிலான சிரேஷ்ட மெய்வல்லுநர் போட்டி ஒடிசாவின் புபனேஷ்வர் நகரில் உள்ள காலிங்க விளையாட்டரங்கில் அண்மையில் நடைபெற்றது. இதன்போது அவர் தங்கப்பதக்கத்தை வென்றார். இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களை முறையே கேரள மாநிலத்தின் மொஹமட் அனாஸ் (45.76 செக்கன்கள்), மொஹமட் அஜ்மல் (45.90) ஆகியோர் பிடித்திருந்தனர்.

## அபார வெற்றியீட்டிய இலங்கை

சிம்பாப்வேயில் நேற்று முன்தினம் முதல் நடைபெற்று வரும் ஐ.சி.சி. உலகக்கிண்ண தகுதிகான் தொடரில் இலங்கை அணி நேற்று தங்களது முதல் போட்டியில் ஐக்கிய அரபு இராச்சிய அணியை 175 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இலகுவாக வீழ்த்தியது.

போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற ஐக்கிய அரபு இராச்சிய அணி முதலில் களத்தடுப்பை தெரிவு செய்ய முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி முன்வரிசை வீரர்களின் அபார துடுப்பாட்டத்தால் நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 06 விக்கெட்களை இழந்து 355 ஓட்டங்களை குவித்தது.

356 என்ற இமாலய வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய ஐக்கிய அரபு இராச்சிய அணி 39 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்களையும் இழந்து 180 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. பந்துவீச்சில் வணிந்து ஹசரங்க 24 ஓட்டங்களுக்கு 06 விக்கெட்களை கைப்பற்றியதுடன் போட்டியின் ஆட்டநாயகனாகவும் தெரிவானார். இலங்கை அணி தங்களது அடுத்த போட்டியில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஓமான் அணியை எதிர்கொள்கிறது.

## மின்னொளி கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் அட்டாளைச்சேனை சோபர் விளையாட்டுக் கழகம் சம்பியன்

*(அட்டாளைச்சேனை மேலதிக செய்தியாளர்)*




அட்டாளைச்சேனை எவடோப் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற எவடோப் மின்னொளி கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் அட்டாளைச்சேனை சோபர் விளையாட்டுக் கழகம் சம்பியன் கிண்ணத்தை வென்றது.

அட்டாளைச்சேனை பொது விளையாட்டு மைதானத்தில் கடந்த வாரம் நடைபெற்ற இறுதிப் போட்டியில் அட்டாளைச்சேனை எவடோப் விளையாட்டுக் கழகமும் அட்டாளைச்சேனை சோபர் கழகமும் மோதியது. இதில் 20 ஓட்டங்களினால் சோபர் அணி வெற்றியீட்டியது.

இறுதிப் போட்டியில் வெற்றி பெற்ற சோபர் அணிக்கு வெற்றிக் கிண்ணத்துடன் 40 ஆயிரம் ரூபா பணப்பரிசும் இரண்டாமிடம் பெற்ற எவடோப் அணிக்கு கிண்ணத்துடன் 20 ஆயிரம் ரூபா பணப்பரிசும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## விழிப்புணர்வு கிரிக்கெட் போட்டி: சட்டத்தரணிகள் அணி வெற்றி



வடக்கு மாகாணத்தில் வைத்தியர்கள் மற்றும் சட்டத்தரணிகள் இடையே சிநேகபூர்வமாக இடம்பெற்ற கிரிக்கெட் போட்டியில் சட்டத்தரணிகள் அணி வெற்றி பெற்றது.

இரண்டாவது வருடமாக நடத்தப்பட்ட குறித்த கிரிக்கெட் போட்டி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. 35 ஓவர்கள் கொண்ட போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய வைத்தியர்கள் அணி 34.4 ஓவரில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 226 ஓட்டங்களை பெற்றது. 227 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சட்டத்தரணிகள் அணி 22.3 ஓவரில் மூன்று விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் குறித்த போட்டி யாழ்ப்பாண மருத்துவ சங்கத்தினால் இம்முறை ஏற்பாடு செய்யப்பட்டது. கடந்த வருடம் முதல் தடவையாக நடத்தப்பட்ட துடுப்பாட்டப் போட்டியிலும் சட்டத்தரணிகள் அணி வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது. போட்டியில் விருந்தினர்களாக நீதிபதிகள், வைத்திய நிபுணர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7